இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 20 செப்டம்பர் 2024 இதழ்:- 16

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன்வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் முதல் 14 வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி.

தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600



## 75 ஆண்டு வரலாறு கொண்ட தமிழரசுக்கட்சியின் மாண்பை ஆழக் குழி தோண்டி நீளப் புதைக்கும் "பச்சோந்தித் தலைவர்" மாவை சேனாதிராஜா



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வரலாற்றில் தந்தை செல்வா தொடக்கம் திரு அமிர்தலிங்கம் வரை பல் வேறு தலைவர்கள் காலம் காலமாக தலைமை யேற்று மானம் மரியாதை சுயகௌரவம் குலையாமல் வழி நடத்திய கட்சியை இன்று மாவை.சேனாதிராஜா என்கின்ற பதவி ஆசையும் தன் மகனை வாரிசு ஆக்கும் கனவையும் மனதில் கொண்டு தமிழரசுக் கட்சியின் மானத்தை பாடையேற்றி வருகின்ற கேவலம் கெட்ட தலைவராக உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். (3ம் பக்கம் பார்க்க)

## எந்த வேட்பாளர் வெற்றி பெற்றாலும் அவருடன் பணியாற்றுவோம்! தமிழ்மக்களுக்கு சுமந்திரன் என்ன சொல்ல வருகின்றார்?

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட் பாளர்களையும் அதிகாரப்பகிர்வு குறித்த வாக்குறுதியைக் கொடுக்க வைத்திருக்கிறோம். எனவே மூவரில் எந்த வேட்பாளர் வென்றாலும், தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதை முன்னிறுத்திய நடவடிக்கைகளில் தமிழரசுக்கட்சி தொடர்ந்து ஈடுபடும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



**ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca**

## தமிழ்ப் பொது வேட்பாளர்:- தமிழரை ஒன்று திரட்டவா? தமிழ்க்கட்சிகளைப் பிரிக்கவா?

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Simcoe St N. & Conlin Rd**

Oshawa $264,990
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


**Sheppard Ave E / Neilson Rd**

Malvern $749,000
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED


**Neilson/Tapscott**

Scarborough $459,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

**Simcoe St N/ Brittania Ave**


Oshawa $770,000
4 Beds • 3 Bath • 9 Rooms
A Beautiful Corner Townhouse

**Sheppard & Neilson**

Malvern $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!

**Galloway Rd/ Guildwood Pkwy**

Scarborough $998,888
3+4 Beds • 4 Baths • 6+5 Rooms
Hardwood Throughout


**McLevin Ave & Morningside**


Malvern $888,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

**Townline Rd & Shankel Rd**

Oshawa $999,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

**Mississauga Rd & Eglinton Ave**


Mississauga $999,999
3 Beds • 4 Baths • 6+1 Rooms
Fully Fin Basement W Sep Entrance


**Church St N & Rossland Rd W**

Ajax $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout


**Woodbine Ave & Church St**

Georgina $1,170,000
4 Beds • 4 Baths • 9 Rooms
Stunning 2-year-old home

**Holland St W & Simcoe Road**

Bradford $1,290,000
4+1 Beds • 5 Baths • 9 Rooms
Finished W/O Basement Kitchen

**Markham Rd / 16th Ave**

Markham $3,599
3 Beds • 2 Baths • 8 Rooms
~5min Walk To Mount Joy GO

**Bellamy Rd/Eglinton Ave**
FOR LEASE

Markham $3,000
3 Beds • 1 Bath • 5 Rooms
Quick Access To Highway 401

**Warden Ave / St. Clair Ave E**
FOR LEASE

Scarborough $2,700
2+1 Beds • 1 Bath • 5 Rooms
Nicely Maintained And Cleaned

**Neilson Rd & Sheppard Ave**
FOR LEASE

Scarborough $2,000
2 Beds • 1 Bath • 4 Rooms
Oversized Basement For Rent

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# 75 ஆண்டு வரலாறு கொண்ட தமிழரசுக்கட்சியின் மாண்பை ஆழக் குழி தோண்டி நீளப் புதைக்கும் "பச்சோந்தித் தலைவர்" மாவை சேனாதிராஜா

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வரலாற்றில் தந்தை செல்வா தொடக்கம் திரு அமிர்தலிங்கம் வரை பல்வேறு தலைவர்கள் காலம் காலமாக தலைமையேற்று மானம் மரியாதை சுயகௌரவம் குலையாமல் வழி நடத்திய கட்சியை இன்று மாவை.சேனாதிராஜா என்கின்ற பதவி ஆசையும் தன் மகனை வாரிசு ஆக்கும் கனவையும் மனதில் கொண்டு தமிழரசுக்கட்சியின் மானத்தை பாடையேற்றி வருகின்ற கேவலம் கெட்ட தலைவராக உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பதென்ற நிலைப் பாட்டை வலியுறுத்தி விசேட அறிக்கையொன்றை இலங்கை தமிழரசுக் கட்சி கடந்த 16செப்டம்பர் 2024 திங்கட்கிழமை வெளியிட்டுள்ளது. வவுனியாவில் அறிக்கை வெளியிடப் பட்ட போது கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தலைமை தாங்கி இருந்தார்.

முன்னதாக ஞாயிற்றுக்கிழமை அலுவலகத்திற்கு நேரில் சென்று பொதுவேட்பாளர் அரியநேந்திரனை சந்தித்து தனது ஆதரவை தெரிவித்திருந்த மாவை வவுனியாவில் சஜித்தை ஆதரிப்பதாக விசேட அறிக்கையை வெளியிட்ட கையோடு யாழ்ப் பாணத்திற்கு வந்து கொண்டிருக்கும் போது கிளிநொச்சியில் நடைபெற்றுக் கொண்டிருந்த தமிழ் பொதுவேட்பாளரது மேடையில் ஏறி அவருக்கு ஆதரவு என்று முழங்கினார். இதில் முக்கியமானதொரு விடயம் பொது வேட்பாளரை ஆதரிப்பதாக யூடிப்புகளுக்கும் சமூக ஊடகங்களுக்கும் வீராவேசமாகக் கதைக்கும் கிளிநொச்சிப் பண்ணையார் ஸ்ரீதரன் எந்தவொரு மேடையிலும் ஏறவும் இல்லை. பேசவும் இல்லை.

இது இவ்வாறிருக்க ரணில் விக்கிரமசிங்கா மாவையின் வீடு தேடிச் சென்று ஆதரவு கேட்ட போது பொன்னாடை போர்த்திக் கௌரவித்து ஆதரவு என்று அறிக்கை விட்டதுடன் தனது மகன் கலையமுதன் சம்பந்தி மாமனிதர் ரவிராஜின் மனைவிய சசிகலா மருமகள் ஆகியோரையும் சந்திக்க வைத்து ஆதரவைத் தெரிவிக்க வைத்துள்ளார்.

இது தொடர்பாக யாழ். பத்திரிகை ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மறைந்த பாராளுமன்ற உறுப்பிரான ரவிராஜின் மனைவியான சசிகலா மற்றும் மாவை சேனாதிராஜா வின் மகனானா கலை அமுதன் ஆகியோர் யாழ் தேர்தல் பிரசாரத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவை சந்தித்து, வடமாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.




மாவை. சேனாதிராஜாவின் இந்தக் கேவலம் கெட்ட செயல் தமிழரசுக் கட்சியை கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த கட்சித் தொண்டர்களுக்கு மாத்திரமல்ல தலைமுறை தலைமுறையாக கட்சியை ஆதரித்து வரும் தமிழர்களுக்கும் மிகப் பெரும் மானப் பிரச்சனையாகவும் அவமானமாகவும் மாறி விட்டது.






இது தொடர்பாக தமிழரசுக்கட்சியின் பிரமுகரோடு உரையாடிய போது அவர் சொன்னார் மாவை அவமானப்படுகின்றார். அழிகின்றார் அவமானப்பட்டு அழிகின்றார். அவ்வளவு தான். கட்சிக் கட்டுப்பாட்டை மீறுகின்றவர்கள் மாவையோ ஸ்ரீதரனோ அரியநேந்திரனோ எவர் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்காத வரை கட்சியையும் காப்பாற்ற முடியாது. இவர்களையும் திருத்த முடியாது என்றார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# மாவை தலைமையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் சஜித்திற்கே வாக்களிப்பது என்று தீர்மானம்




எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென்ற எமது கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்திற்கு அமைவாக வாக்காளர்கள் உரியவாறு தங்கள் வாக்கை அவருக்கு வழங்க வேண்டும் என தமிழரசுக்கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தீர்மானம் மிக்க உயர்மட்ட கலந்துரையாடல் வவுனியா தமிழரசுக்கட்சியின் அலுவலகத்தில் 16 செப்டம்பர் 2024 திங்கட்கிழமை நடைபெற்றது. குறித்த கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவைசேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எ.சுமந்திரன், சி.சிறிதரன், செயலாளர் ப.சத்தியலிங்கம், முன்னாள் மட்டுமாநகரசபை மேயர் சரவணபவன், சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் தமிழரசுக்கட்சியின் தீர்மான அறிக்கை கட்சியின் தலைவர் மாவைசேனாதிராஜாவால் வாசிக்கப்பட்டது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இத்தேர்தலில் மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் பரிசீலிக்கப்பட்டன. இத்தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் தமிழ் மக்களின் பிரதேசங்களின் பொருளாதார மேம்பாடு பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

இவ்விஞ்ஞாபனங்களில் புதிய அரசியலமைப்பு உருவாக்குதலும் ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ள பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுலாக்குவதும் ஆகும். ஒற்றையாட்சி மற்றும் புத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதனவாகும். அதற்குப் பதிலாக இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பின் மூலம் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்பது பிரதானமாகும்.

முக்கியமாக இவ்விடயங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாச, ஜே.வி.பி தலைவர் அநுர குமார திசாநாயக ஆகியோருடன் நேரடியாக பேச்சுக்கள் நடைபெற்றன. தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ்ப் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு இணைப்பாட்சி அடிப்படையிலான சமஷ்டிக் கட்டமைப்பில் முழுமையான தன்னாட்சி சம்பந்தமாக தொடர்ந்து போராடி வந்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும், புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் பொருட்டு தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தீர்வுக்கான பிரேரணை முன்வைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்கள் என்ற வகையில் முஸ்லீம் சமூகத்துடனும் மலையக தமிழர்களுடன் இணைந்து செயல்படுதல் வேண்டும். 13ஆவது அரசியல் திருத்தம் அரசியலமைப்பின் ஒற்றையாட்சிக்குட்பட்டது. இதனை அரசியல் தீர்வாக எம்மால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். இருப்பினும் தமிழினத்தின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை அடையும் வரை இந்திய அரசின் நட்புறவுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நடைமுறையிலிருக்கும் மாகாண அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

2002 டிசம்பரில் ஏற்பட்ட ஒஸ்லோ உடன்பாட்டில் சில அடிப்படைக் கோட்பாடுகளின் மீது இணக்கம் காணப்பட்டது. அக்கோட்பாடு பின் வருமாறு அமைந்தது. இந்த வரலாற்று நிகழ்வு இன்றும் பரிசீலனைக்குரியது. 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப்பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல் என்பதாகும். சர்வதேச நியமங்களின் படியும், சர்வதேச சாசனங்களின் படியும் தமிழர்களாகிய நாங்கள் தனிச்சிறப்பு மிக்க மக்கள் குழாமாவோம்.

இறையாண்மை என்பது மக்களிடமே உண்டு அரசிடம் அல்ல என்பதை நாம் வலியுறுத்துகிறோம். 'ஜனாதிபதித் தேர்தல் முடிந்தபின் எங்களால் சமர்ப்பிக்கப்படும் அரசியலமைப்புக்கான அறிக்கையில் குறிப்பிடப்படும் தமிழ்த் தேசிய இனத்திற்கான அரசியல் தீர்வை அடைவதற்கும், தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கும் தீர்வுகாண வெற்றிபெறும் ஜனாதிபதியுடனும் அரசுடனும் வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்போம்.' தமிழ்த்தேச மக்கள் அரசியல் தீர்வைத் தீர்மானிப்பதிலும் அந்த இலட்சியத்தை அடைவதற்கும் இடர்களோ முரண்பாடுகளோ ஏற்படாமல் நல்லெண்ணத்துடன், ஒற்றுமை உணர்வுடன் தேர்தலின் போதும், எதிர்காலத்திலும் ஒன்றாக நின்று உழைப்போம் என திடமான தீர்மானத்தைக் கொண்டிருக்கிறோம்.' எனவே 2024 செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பின் போது ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென்ற எமது கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்திற்கு அமைவாக வாக்காளர்கள் உரியவாறு தங்கள் வாக்கை அவருக்கு வழங்க வேண்டும் என்றுள்ளது.



கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக் கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமான வரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத் திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# யார் இந்த அநுர குமார? தமிழ் மக்களிடம் சென்று வாக்குக் கேட்கும் தார்மீக உரிமை உண்டா?

இலங்கை இந்திய ஒப்பந்தம் மற்றும் மாகாண சபை முறைமைக்கு எதிராக அன்று போர்க் கொடி தூக்கிய ஜே.வி.பியினருக்கு வடக்குக்குச் சென்று வாக்குக் கேட்பதற்குரிய உரிமை கிடையாது. ஆனால், எமக்கு அதற்குரிய உரிமை உள்ளது. ஏனெனில் அனைத்து இன மக்களையும் அரவணைத்துக் கொண்டு பயணிக்கும் கட்சி தான் எமது கட்சியாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,



13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதற்கு எதிராக மக்களைக் கொன்ற கட்சி தான் ஜே.வி.பி. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டவர்களையும் ஜே.வி.பி. கொன்றது. இந்திய மருந்துகளைக் கொண்டு வந்த அதிகாரிகளையும் இந்தக் கட்சி கொலை செய்தது. இந்தியப் பொருட்களைப் புறக்கணிக்குமாறு அழைப்பும் விடுத்தது. எனவே, இந்தக் கட்சியினருக்கு வடக்குக்குச் சென்று வாக்கு கேட்கும் உரிமை கிடைக்காது.

வடக்கு மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பகிர்வு மற்றும் அபிவிருத்திகளைச் செய்யக்கூடிய தலைவர் சஜித் பிரேமதாஸதான் என்பதை அந்தப் பகுதி மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். வடக்கில் உள்ள தமிழ்த் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனை அவர்கள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளனர்.

அதேபோல் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களும் சஜித்துக்கு பேராதரவு வழங்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். குறித்த பகுதிகளுக்குச் சென்றபோது சஜித்துக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது எனவும் தெரிவித்தார்.

# சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரால் அரியநேந்திரனுக்கு உயிர் அச்சுறுத்தலா? பொலிசாரிடம் இருந்து சென்ற அவசர கடிதம்!

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என தெரிவித்து பொலிஸார் அவசர கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பியுள்ளனர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபரால் சிங்களத்தில் குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்முறை தேர்தலில் அரியநேத்திரன் மீதான மக்கள் செல்வாக்கின் நிமித்தம் உயிருக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் கலந்து கொள்ளும் பொதுமக்கள் சந்திப்பு மற்றும் நிகழ்வுகளின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் போது அந்த விடயங்கள் குறித்து அவதானம் செலுத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுவதால் இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் அதிருப்தியில் இருப்பதாகவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



ஆகவே பொது விடயங்களின் கீழ் அச்சுறுத்தல் இருப்பதாகவும், அது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறும் அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு மாகாணசபை பலப்படுத்தப்படும்! யாழ்ப்பாணத்தில் ரணில் சூளுரை!



வடக்கில் மாகாண சபைகளை வலுப்படுத்தி அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக தனது கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியுள்ளதாகவும், மத்திய அரசாங்கத்திற்கு உதவும் வகையில் 09 மாகாண சிற்றரசுகளின் கீழ் அபிவிருத்தி வேலைத் திட்டம் துரிதப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்

யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் 14 செப் 2024 சனிக்கிழமை முற்பகல் இடம் பெற்ற ரணிலால் இயலும் வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் எனவும் நவாஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக எதிர் வரும் 05 வருடங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, வடக்கின் விடயங்களை அரசியல் பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. அப்பிரதேசத்திற்கு அபிவிருத்தியும் அவசியம். இல்லையெனில் ஏனைய மாகாணங்கள் முன்னேறுகையில் வடக்கு பின்தங்கிவ ிடும் .வடக்கின் அபிவிருத்தியை போன்றே அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பேன் என்றறார்.

# சுமந்திரன் - சாணக்கியனால் எனக்கு ஆபத்தில்லை-அரியம்



நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் போன்றவர்களால் தனக்கு உயிர் ஆபத்து ஏற்படாது என தான் நம்புவதாக தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். யாழ் . ஊடக அமையத்தில் 18 செப்டம்பர் 2024 புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், எனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை நான் பெரிசாக எடுத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் எனக்கு தற்போது பிரமுகர் பாதுகாப்பு பிரிவை சேர்ந்த (MSD) இருவரை பாதுகாப்புக்கு தந்துள்ளார்கள்.

பொது வேட்பாளராக நான் போட்டியிடுவதால் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ, சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் போன்றவர்கள் அதிருப்தியில் இருப்பதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக அவர்களால் எனக்கு ஆபத்து வரும் என நான் நம்பவில்லை.

அதேவேளை என்னை வேட்பாளரின் இருந்து விலகுமாறு யாரும் என்னிடம் நேரில் கேட்கவில்லை. எனக்கு அந்த விதமான அழுத்தங்களையும் தரவில்லை. நான் போட்டியிடுவதால் சிலருக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். அதற்காக யாரும் எனக்கு அச்சுறுத்தல் விடுக்கவோ , அழுததம் தரவோ இல்லை என மேலும் தெரிவித்தார்.



## பொது வேட்பாளருக்கு ஆதரவாக மலையகம்

மலையகம் அக்கரப்பத்தனையில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக நேற்று மாபெரும் பொது கூட்டம் இடம்பெற்றது. இதில் மலையகத்தை சேர்ந்த பல புத்திஜீவிகள் அரசியல் பிரமுகர்கள் முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் என பல்லாயிரக் கணக்கில் மக்கள் கலந்து கொண்டனர். வரலாற்றில் முதல் முறையாக ஒருமித்த தமிழ் இனமாக அனைத்து தமிழர்களும் ஒன்றிணைந்து நிற்பது சிறப்பம்சம் ஆகும். அனந்தி சசிதரன் சிறப்பு பேச்சாளராக பங்கேற்றிருந்தார்.


# முக்கிய அறிவித்தல்!

## வருடாந்தப் பொதுக்கூட்டம் தேர்தல் 2024

ஸ்ரீ ஐயப்ப சமாஜம் ஒப் ஒன்ராறியோவின் 29வது ஆண்டிற்கான வருடாந்த பொதுக் கூட்டம் 19 ஒக் டோபர் 2024 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை ஆலய கலாச்சார மண்டபத்தில் இடம் பெறும்.

2024ம் ஆண்டுக்கான மூன்று நிர்வாக அங்கத்தவர்களுக்கான தெரிவு (தேர்தல்) 26 ஒக்டாபர் 2024 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பகல் 2.00 மணி வரை ஐயப்பன் ஆலய கலாச் சார மண்டபம் 2 இல் இடம்பெறும்.

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

416 321 6104 / 416 321 7558

அறங்காவலர் சபை

# எந்த வேட்பாளர் வெற்றி பெற்றாலும் அவருடன் பணியாற்றுவோம்! தமிழ்மக்களுக்கு சுமந்திரன் என்ன சொல்ல வருகின்றார்?

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களையும் அதிகாரப்பகிர்வு குறித்த வாக்குறுதியைக் கொடுக்க வைத்திருக்கிறோம். எனவே மூவரில் எந்த வேட்பாளர் வென்றாலும், தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதை முன்னிறுத்திய நடவடிக்கைகளில் தமிழரசுக்கட்சி தொடர்ந்து ஈடுபடும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மூவர் பிரதான வேட்பாளர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மூவருடனும் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றோம். மூவருமே உச்சபட்ச அதிகாரப்பகிர்வினை முன்னிறுத்தி செயலாற்றுவதாகக் கூறியிருக்கின்றார்கள். அதில் ஏனைய வேட்பாளர்களை விட சஜித் பிரேமதாச சற்று அதிகமாகக் கூறியிருக்கிறார். எனவே அவருடன் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கிறது.

இருப்பினும் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறாமல் ரணில் விக்ரமசிங்கவோ அல்லது அநுரகுமார திஸாநாயக்கவோ வெற்றியீட்டினால் என்ன நிலைமை என்ற கேள்வி பலரால் கேட்கப்படுகின்றது. அது நியாயமான கேள்வி. எங்களுடைய நோக்கம் இவரோ அல்லது அவரோ வெல்ல வேண்டும் என்பது அல்ல. மாறாக எமது மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு பெறப்பட வேண்டும் என்பதே நோக்கமாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த பிரதான மூன்று வேட்பாளர்களில் ஒருவர் தான் வெற்றி பெறமுடியும். ஆனால் மற்றைய இருவரும் கூட அவர்கள் வெளிப்படையாக நாட்டு மக்களுக்குக் கூறியிருக்கும் நிலைப்பாட்டின்படி, வெற்றி பெறும் வேட்பாளர் எடுக்கும் முயற்சிக்கு எதிராக செயற்படமுடியாது. எனவே மூன்று பிரதான வேட்பாளர்களையும் அதிகாரப் பகிர்வு குறித்த வாக்குறுதியைக் கொடுக்க வைத்திருக்கிறோம். இது 'எமது மக்களின் வாக்குகளை உங்களுக்குத் தருகிறோம்.

அதேபோன்று நீங்கள் எமது மக்களுக்குரிய தீர்வைத் தாருங்கள்' என்ற பேரம் பேசுதலின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே மூவரில் எந்த வேட்பாளர் வென்றாலும், தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதை முன்னிறுத்திய நடவடிக்கைகளில் தமிழரசுக்கட்சி தொடர்ந்து ஈடுபடும்.

அதேவேளை மேற்குறிப்பிட்ட பேரம் பேசுதலின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் உச்சபட்ச வாக்குறுதி அளித்த சஜித் பிரேமதாஸவுக்கு எமது மக்களின் வாக்குகளை அளிப்பதாகக் கூறியிருக்கின்றோம். எனவே இவ் விடயத்தில் தமிழ் மக்களும் ஒத்துழைப்பு சஜித் பிரேமதாஸ வுக்கு வாக்களிக்க வேண்டும் என்றார்.

## டிரம்பை கொலை செய்ய முயற்சித்தவர் உக்ரேன் ஆதரவு செயற்பாட்டாளரென அமெரிக்க ஊடகங்கள் தகவல்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பினை கொலை செய்ய முயற்சித்தவர் உக்ரைன் ஆதரவு செயற்பட்டாளர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரயான் வெஸ்லே ரூத் என்ற 58வயது நபரே டிரம்பினை கொல்வதற்கு திட்டமிட்டார் என அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உக்ரைனின் சார்பில் போரிடுவதற்காக வெளிநாட்டவர்களை சேர்க்க முயன்றார் உக்ரைனிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

புளோரிடாவின் கோல்ப் மைதானத்தில் டிரம்பினை கொலை செய்வதற்கு இந்த நபர் முயற்சி செய்தார் என எவ்பி ஐ அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.



மைதானத்தில் புதர்கள் காணப்பட்ட பகுதிக்குள் ஏகே 47 துப்பாக்கி தெரிவதை பார்த்த இரகசிய சேவை பிரிவினர் உடனடியாக துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

சந்தேகநபர் காரில் தப்பியோடினார் அவரை துரத்திச் சென்ற இரகசிய சேவை பிரிவினர் 38 மைல்களிற்கு அப்பால் அவரை கைது செய்தனர்

இந்தச் சம்பவம் தொடர்பில் ஜோ பைடன் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ட்ரம்ப் மீதான கொலை முயற்சி குறித்து மத்திய சட்ட அமலாக்கப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது. முன்னாள் அதிபர் ட்ரம்ப்பிற்கு எந்த பாதிப்பும் ஏற்படாதது நிம்மதியளிக்கிறது. நான் கூறுவது போல் அமெரிக்காவில் அரசியல் வன்முறைகளுக்கு இடமில்லை. ட்ரம்பிற்கு தேவையான உரிய பாதுகாப்பு வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்' என கூறப்பட்டுள்ளது.



# 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் கடமை எங்களுக்கு உண்டு என்கிறார் சஜித்

நான் 13 வதுதிருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து தெரிவித்திருக்கின்றேன், நான் இன்றும் அதனை தெரிவிப்பேன் நாளையும் தெரிவிப்பேன்.'

நாட்டின் இனங்கள் மதங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியம், 13வது திருத்தம் சட்டபுத்தகத்தில் இருக்கின்றது தானே?'



சட்டத்தில் உள்ளதை நடைமுறைப்படுத்த வேண்டும், அதனால் நாட்டின ஐக்கியத்திற்கு பாதிப்பு ஏற்படாது, நீதிமன்ற தீர்ப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது,

ஆகவே 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு எங்களிற்குள்ளது,

ஏனைய தலைவர்கள் இதனை தெரிவிப்பதற்கு அஞ்சுகின்றனர் என்பது எனக்கு தெரியும், நான் அப்படியில்லை, நான் சரியான விடயங்களை ஒளிவுமறைவின்றி தெரிவிப்பேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்பிரேமதாச பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் மேடைகளில் வெற்றுக் கதிரைகளுடன் பேசும் சரத் காணி, பொலிஸ் அதிகாரம் வழங்க மாட்டாராம்



நான் ஜனாதிபதியானால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் வழங்க மாட்டேன் என ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கை, இந்திய ஒப்பந்தத்துக்கு தெற்கு மக்களின் ஆசிர்வாதம் இருக்கவில்லை. அது பலவந்தமாகத் திணிக்கப்பட்டதொன்றாகும். அதனால் தான் வடக்கு கிழக்கு இணைப்பு, பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் என்பன நடைமுறைப்படுத்தப்படவில்லை.

குறித்த ஒப்பந்தம் அமுலாக்கப்பட்ட விதத்தை நானும் அனுமதிக்கவில்லை. ஒப்பந்தம் வந்தபோது நான் இராணுவத்தில் இருந்தேன். ஒப்பந்தம் பலவந்தமாகத் திணிக்கப்பட்டதை ஏற்க முடியாது.

13 வழங்கப்படும் எனச் சஜித் கூறுகின்றார். அதேபோல் ஐக்கியமான நாடு பற்றி சஜித் மற்றும் அநுர ஆகியோர் கதைக்கின்றனர். ஆனால் ஒற்றையாட்சி எனும் நிலைப்பாட்டிலேயே நான் உள்ளேன். நான் ஜனாதிபதியாகும் பட்சத்தில் மாகாணங்களுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கமாட்டேன். ஆனால், 13 ஐ விடவும் அதிகாரங்களைப் பகிர்ந்து மக்கள் சமத்துவத்துடன் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கலாம். அவ்வாறானதொரு நிலை ஏற்படும் வரை மேற்படி அதிகாரங்களை வழங்க முடியாது எனவும் தெரிவித்தார்.

# அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தலைநகரின் பெயர் மாற்றம்

அந்தமான், நிக்கோபார் தீவுகளின் தலைநகர் போர்ட் பிளேயர் பெயர் ஸ்ரீவிஜயபுரம் என மாற்றம் செய்யப்பட்டவுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடா கடல் பகுதியில் அந்தமான், நிக்கோபார் தீவுகள் அமைந்துள்ளது.

இந்தியாவின் யூனியன் பிரதேசங்களில் ஒன்றான அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தலைநகராக போர்ட் பிளேயர் உள்ளது.

இந்நிலையில் தலைநகர் போர்ட் பிளேயரின் பெயரை மாற்றவுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

போர்ட் பிளேயரின் பெயரை ஸ்ரீ விஜயபுரம் என்று மாற்றவுள்ளதாக இந்திய மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை இந்திய உள்விவகார அமைச்சர் அமித்ஷா கடந்த 13 செப்டம்பர் 2024 வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளார்.



இது தொடர்பாக இந்திய உள்விவகார அமைச்சர் அமித்ஷா தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,

காலனி ஆதிக்க (ஆங்கிலேய ஆட்சியின்) முத்திரைகளில் இருந்து நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற (இந்திய) பிரதமர் மோடியின் தொலைநோக்கு பார்வையால் உத்வேகம் பெற்று போர்ட் பிளேயர் பெயரை ஸ்ரீ விஜயபுரம் என பெயர் மாற்றம் செய்ய முடிவு செய்துள்ளோம். சோழ பேரரசின் கடற்படை தளமாக செயல்பட்ட அந்தமான் நிக்கோபார் தீவுகள் நாட்டின் சுதந்திர போராட்ட வரலாற்றில் ஈடுஇணையற்ற இடம் பிடித்துள்ளது. தற்போது நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய தளமாகவும் திகழ்கிறது என பதிவிட்டுள்ளார்.

# இலங்கை மக்கள் தெரிவு செய்யும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா எதிர்பார்ப்பு - ஜீலிசங்



இலங்கை மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா எதிர்பார்த்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு அமெரிக்கத் தூதுவர் ஜஜீலி சங் தனது எக்ஸ் (ஓ) தளத்தில் இந்த விடயத்தினை பதிவிட்டுள்ளார். சர்வதேச ஜனநாயக தினமான இன்றைய தினத்தில், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி சங் இந்த விடயத்தை பதிவிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, சர்வதேச ஜனநாயக தினமான இன்றைய தினத்தில், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள், நீதி போன்ற வலுவான மற்றும் நிலையான ஜனநாயகத்தின் கொள்கைகளை நாங்கள் கொண்டாடுகிறோம். தேர்தல்கள் மூலம் தங்கள் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒவ்வொரு தனிநபருக்கும் ஒரு கருத்து இருப்பதை உறுதிசெய்கிறோம். இலங்கை மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா எதிர்பார்த்துள்ளது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவது இலங்கையின் ஜனநாயகத்திற்காக ஆற்றப்பட வேண்டிய முக்கிய கடமை எனவும் குறித்த பதிவில் அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி இடம் பெறவுள்ள நிலையில், அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் தனது எக்ஸ் தளத்தில் மேற்படி கருத்துக்களை பதிவிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# தமிழரசுக்கட்சியில் உண்மையைப் பேசுவது சுமந்திரனா? ஶ்ரீதரனா?

இலங்கை தமிழ் அரசு கட்சியின் உத்தியோகபூர்வ முடிவை அதன் மத்திய குழு அறிவித்திருந்தது. ஆனால், கட்சியின் மாவட்டமட்ட உறுப்பினர்கள் பலர் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றனரென அறிவித்ததுடன், தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவான பிரசாரங்களை முன்னெடுத்து வந்தனர். ஆனால், கட்சியின் உத்தியோகபூர்வ முடிவை வெளிப்படையாக எதிர்க்காமலும் அதேவேளை தங்களை தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவாகவும் காண்பித்துக் கொண்டனர். இந்த நிலையில் தமிழ் அரசு கட்சியை தீர்மானிக்கும் நபரான எம். ஏ. சுமந்திரன் தமிழ் பொது வேட்பாளரை தொடர்ச்சியாக எதிர்த்து வந்தார். தோற்கடிக்கப் போவதாகவும் கூறியிருந்தார். இந்த நிலையிலேயே தனது செல்வாக்கைக் கொண்டு கட்சியை சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக மாற்றினார்.

இதனோடு உடன்பாடு இல்லை என்றவர்களும் வெளிப்படையாக தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பின் மேடைகளில் ஏறவில்லை. இந்த நிலையில் கட்சியின் முடிவுக்கு அமைவாக சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவான பிரசாரக் கூட்டத்தில் சுமந்திரன் பேசியிருக்கின்றார். தமிழ் அரசுக் கட்சி சஜித்துடன் தான் என்பதை காண்பித்ததுடன், சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாகப் பிரசாரங்களையும் மேற்கொள்வோம் என்பதையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தமிழ் பொது வேட்பாளரை வெளிப்படையாக எதிர்க்கும் சுமந்திரன் வெளிப்படையாக சஜித்தின் மேடையில் நிற்கின்றார். ஆனால், தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதாகக் கூறும் சிறீதரனோ வெளிப்படையாக தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் மேடைகளில் இதுவரையில் தோன்றவில்லை.

தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதாகக் கூறும் தமிழ் அரசு கட்சியினர் சுமந்திரனை கண்டு அஞ்சுகின்றனரா அல்லது தமிழ் அரசு கட்சியும் தமிழ்ப் பொதுவேட்பாளருடன் நிற்பதான தோற்றத்தை காண்பிப்பதற்காக நடிக்கின்றனரா? இதில் எது உண்மை? தமிழ் அரசுக் கட்சி ஒரு பெரிய கட்சி பாரம்பரிய கட்சி என்றெல்லாம் கூறிக் கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றும் வகையில் செயலாற்றுவதை நிறுத்த வேண்டும். ஒன்றில் பொது வேட்பாளரை ஆதரிப்பதாயின் வெளிப்படையாக அதற்கான பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும். வெறுமனே இணைய ஊடகங்களிலும் யூ - ரியூப்பிலும் பேசி விட்டால், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதாக அர்த்தமல்ல.

மாறாக, தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி மக்களை வாக்களிக்கத் தூண்டும் நோக்கில் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும். தங்களின் பாராளுமன்ற தேர்தலின்போது, எவ்வாறு வாக்குகளை திரட்ட பணியாற்றுவார்களோ அதே ஆர்வத்தோடும் அர்ப்பணிப்போடும் உழைக்க வேண்டும்.

ஏனெனில், இது ஊர் கூடித் தேர் இழுக்க வேண்டிய விடயம். ஆனால், அந்தத் தேரை இழுப்பதை நாங்கள் குழப்பியே ஆவோம் என்பது தான் சுமந்திரனின் நிலைப்பாடு. சுமந்திரனின் நிலைப்பாடு எதுவோ அதுதான் தற்போது தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது.

அப்படியில்லை என்றால் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பாகக் கூறும் தமிழ் அரசு கட்சியினர் வீட்டை விட்டு வெளியில் வரவேண்டும் இல்லாவிட்டால் சுமந்திரனிடம் தோல்வியடைய வேண்டும். அவ்வாறில்லாது தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றும் வகையில் செயல்படக் கூடாது. சொந்த மக்களுக்கு உண்மையாக இருப்பதற்கான பொறுப்பை தமிழ் அரசு கட்சி வெளிப்படுத்தவேண்டும்.

வாசகர்களே! இப்போது சொல்லுங்கள் இரட்டை வேடம் போடுவதும் தொடர்ந்து மக்களை முட்டாள்கள் ஆக்குவதும் யார்? சுமந்திரனா? சிறிதரனா?

# தமிழக மீனவர்களை மொட்டையடித்து அனுப்பிய ஸ்ரீலங்கா அரசைக் கண்டித்து தமிழக மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை மொட்டையடித்து அனுப்பியதால், இலங்கை அரசைக் கண்டித்து தங்கச்சிமடத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராமேசுவரத்தில் இருந்து கடந்த மாதம் 27-ம் தேதி மீன்பிடிக்கச் சென்ற ஒரு விசைப்படகையும், அதிலிருந்த 8 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டியதாக கைது செய்து, யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர். சிறை தண்டனைக்குப் பின் இவர்களின் வழக்கு கடந்த 5-ம் தேதி மன்னார் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்தபோது வழக்கை விசாரித்த நீதிபதி ரஃபீக் இன்னாசி, ராஜா, சசிக்குமார், மாரி கிங்ஸ்டன், மெக்கான்ஷ் ஆகிய 5 மீனவர்களை விடுதலை செய்ததுடன், தலா ரூ.50 ஆயிரம் அபதாரம் செலுத்தவும் உத்தரவிட்டார். மேலும் கணேசன, சேசு, அடைக்கலம் ஆகிய 3 மீனவர்கள் இரண்டாவது முறையாக எல்லை தாண்டி வந்ததாக கூறி ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனையும், அவர்களுக்கும் தலா ரூ.50 ஆயிரம் அபதாரமும் கட்ட உத்தரவிட்டார்.

இதனையடுத்து 3 மீனவர்களும் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட 5 மீனவர்களுக்கு உறவினர்கள் கடன் வாங்கி 7-ம் தேதி பணத்தை செலுத்தியுள்ளனர். ஆனால் 6ம் தேதி அபராததொகை செலுத்தவில்லையென சிறைத்துறையினர் அவர்களை கைவிலங்கிட்டு மொட்டை அடித்தும், இலங்கை கைதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை கழிவறைகளை சுத்தம் செய்ய வைத்து, வளாகத்திலுள்ள கழிவுநீர் கால்வாய்களையும் சுத்தம் செய்ய



வைத்து கொடுமைப் படுத்தியதாகவும், சொந்த ஊர் திரும்பிய மீனவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

பின்னர் 5 மீனவர்களும் (செப்.13) காலை மெர்ஹானா முகாமில் இருந்து விமான மூலம் இரவு சென்னை வந்தடைந்ததாக கூறினர். மீனவர்கள் சொந்த ஊரான தங்கச்சிமடத்துக்கு வந்து சேர்ந்தனர். மீனவர்கள் மொட்டை அடிக்கப்பட்டு வந்ததை கண்ட அவர்களின் குடும்பத்தினர் கதறி அழுதனர். இதற்கு மீனவர்கள் தரப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து இலங்கை அரசாங்கத்தின் தொடர் அத்துமீறல் மற்றும் மனித நேயமற்ற செயலை கண்டித்தும், மத்திய அரசு மீனவர்கள் பிரச்சனையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காப்பதற்கு கண்டனம் தெரிவித்தும், ராமேசுவரம் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் தங்கச்சிமடம் பேருந்து நிறுத்தம் அருகே மீனவர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மீனவ சங்க நிர்வாகிகள் ஜேசுராஜா, எமரிட் மற்றும் மீனவர்கள், அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

மீனவர் சங்க தலைவர் எமரிட் கூறும் போது, மொட்டை அடிக்கப்பட்டவர்கள் தமிழக மீனவர்கள் தான் என எண்ண வேண்டாம், எங்களுடைய வரிப்பணத்தில் வாழும் இலங்கை அரசு எங்கள் மீனவர்களை மொட்டை அடித்து மனித நேயமற்ற அரக்கர்களாக கொடுமைப்படுத்தி உள்ளனர். மத்திய அரசு இதையும் வேடிக்கை பார்ப்பது நல்லதல்ல. இது இந்தியாவை அவமானப்படுத்தியதாகத் தான் நாங்கள் கருதுகிறோம்.

ஆகவே, இதுவரை இலங்கை கடற்படை எங்களை அடித்து கொடுமைப் படுத்தியது, படகுகளை சிறை பிடித்தது, அதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தோம். ஆனால் இனி மேலும் இவ்வாறான மனிதநேயமற்ற செயலை பொறுத்துக் கொள்ள மாட்டோம். ஆகவே மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கா விட்டால் தமிழகம் தழுவிய மாபெரும் போராட்டங்களை தொடர்ச்சியாக மத்திய அரசுக்கு எதிராகவும், இலங்கை அரசுக்கும் எதிராகவும் நடத்துவோம் என்றார்.

தமிழகம் மற்றும் புதுவைச் சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் சம்பவம் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. அதோடு மீனவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது. இந்த துயரச் சம்பவங்களுக்கு இடையே தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்களும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இத்தகைய சூழலில் தான் வழக்கம் போல் கடந்த மாதம் 5ஆம் தேதி (05.08.2024) தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து ஏராளமான மீனவர்கள் விசைப்படகுகளில் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். அதன்படி மன்னார் மேற்கு குதிரைமலை என்ற கடல்பகுதியில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் தூத்துக்குடி மீனவர்கள் 22 பேரை எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி கைது செய்தனர் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# தமிழ்ப் பொதுவேட்பாளர்:- கண் பார்வையற்ற குருடன் எய்த இலக்கற்ற அம்பு!

- தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் -

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு' எனும் அமைப்பு பா. அரியநேத்திரனை தமிழ்ப் பொது வேட்பாளராக நியமித்த போது தான் தமிழ்த் தேசியத்தின் குறியீடாகவே போட்டியிடுகிறேன் தேர்தல் முடிவுகளின் விளைவுகளுக்கு தன்னைப் பொது வேட்பாளராக நிறுத்திய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு தான் பொறுப்புக் கூற வேண்டும் என்றார்.

அதென்ன குறியீடு. குறியீடாக நின்று எதனைச் சாதிக்கப் போகிறார். தன்னை மலினமாக விளம்பரப்படுத்திக் கொள்வதைத் தவிர அவரால் எதனையும் தமிழ் மக்களின் நலன் சார்ந்து சாதிக்கவே முடியாது.

பா. அரியநேத்திரன் இப்போது (04.09. 2024 அன்று மன்னாரில் வைத்து) நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியாக வருகிறவருக்குப் பாடமாக அமைய வேண்டும் என்பதற்காகவே தமிழ்ப் பொது வேட்பாளராக இந்தத் தேர்தலில் தான் போட்டியிடுவதாகப் பல்லவியை மாற்றிப் பாடுகிறார்.

தென்னிலங்கையிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவோ சஜித்பிரேமதாசாவோ அனுரகுமார திசாநாயக்கவோ நாமல் ராஜபக்சவோ யாரோ ஒருவர் ஜனாதிபதியாக வரப் போகிறார். இவர்களில் யாருக்கு என்ன பாடத்தை அரியநேத்திரன் படிப்பிக்கப் போகிறார்.

தென்னிலங்கையிலிருந்து தெரிவாகப் போகிற இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி வழமை போல் அதாவது கடந்த காலங்களைப் போலவே பௌத்த சிங்களப் பேரினவாத அரசியல் நிகழ்ச்சி நிரலையே கொண்டு செல்வாராயின் இதில் அரியநேத்திரன் என்ன தாக்கத்தைச் செலுத்த போகிறார்.

அவற்றின் சரி பிழைகளுக்குமப்பால் அவை தோல்வியில் முடிந்த கதைகள் என்பது ஒருபுறமிருக்க கால் நூற்றாண்டு கால அஹிம்சைப் போராட்டமும் 30 வருடத்திற்கு மேலாக முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டமும் தென்னிலங்கைச் சிங்களத் தலைவர்களுக்குக் கற்றுக் கொடுக்காத அல்லது அவர்கள் கற்றுக் கொள்ளாத எந்தப் பாடத்தை அரியநேத்திரன் கற்றுக் கொடுக்கப் போகிறார் அல்லது அவர்களாகவே கற்றுக் கொள்ளப் போகிறார்கள்?

அரியநேத்திரனின் இந்த அறிவிப்புத் தமிழர்களை ஏமாற்றுகிற சிறுபிள்ளைத் தனமான அரசியல்.

அறப்போராட்ட காலத்திலும் சரி பின்னர் வந்த ஆயுதப் போராட்ட காலத்திலும் சரி மக்கள் நலன் சார்ந்த எந்த



விதமான மூலோபாயமுமின்றி தந்திரோபாயங்களுமின்றி வெறுமனே மேடைப் பேச்சுச் சாகசங்களால் மக்களை உணர்ச்சியூட்டித் தேர்தலில் வாக்குகளைச் சேகரித்ததைத் தவிர தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் இதுவரை (1987 இல் இந்தியத் தலையீட்டினால் ஏற்பட்ட இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தையும் அதன் விளைவான 13ஆவது திருத்தத்தையும் அதன் கீழ் அமைந்த மாகாண சபை முறைமையையும் தவிர) தம்மை நம்பிய தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த சமூக - பொருளாதார-அரசியல் அனுகூலங்கள் என்ன என்பதை அரியநேத்திரன் பட்டியலிடுவாரா? அவரால் முடியவே முடியாது.

நிலைமை இப்படியிருக்கத் தமிழ்ப் பொதுவேட்பாளராகத் 'தலைப்பாகை' கட்டிக் கொண்டு தன்னை ஒரு பெரும் அரசியல் தலைவராகக் கற்பிதம் பண்ணிக் கொண்டு 13 ஆவது திருத்தத்தைத் திரும்பியும் பார்க்க மாட்டோம் என்கிறார்.

தற்போதுள்ள 13 ஆவது திருத்தத்தை உதறியெறிந்து விட்டு அதனிலும் அதிகாரம் கூடிய அல்லது குறைந்த பட்சம் அதற்குச் சமனான வேறொன்றை அரியநேத்திரனால் கொண்டு வர முடியுமா? அல்லது அரியநேத்திரனை தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தியுள்ள தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினால் அல்லது அவ்வாறான தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் அங்கமாகவுள்ள ஏழு தமிழ் அரசியல் கட்சிகளால் தனியாகவோ அல்லது கூட்டாகவோ அல்லது தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஒப்பந்தத்தில் கையெழுத்துட்டுள்ள ஏழு தனி நபர்களால் தனியாகவோ அல்லது கூட்டாகவோ கொண்டு வரமுடியுமா?

ஆண்டிகள் கூடி மடம் கட்டியது போல் இப்போது தமிழ்ப் பொது வேட்பாளருக்குரிய தேர்தல் விஞ்ஞாபனத்தையும் (அறிக்கையையும்) வெளியிட்டுள்ளார்கள். ஏட்டிலேயே சுரைக்காய் வரைந்திருக்கிறார்கள். அதனை தூக்கிக் காட்டி நல்லதொரு சமையல் செய்து காட்டுகிறோம் பாருங்கள் என்று தமிழ்ச் சமூகத்தை வஞ்சிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள்.

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை செய்யும் இவ் 'வாய் சொல்' வீரர் கூட்டத்தைத் தமிழ் மக்கள் தயவு தாட்சண்யமின்றி நிராகரிக்க வேண்டும்.

அவ்வாறு நிராகரிக்கப்படுவதினூடாகவே தமிழ் மக்களுக்கு அறிவார்ந்ததோர் அரசியற் பாதைக்கான ஆரம்பப் புள்ளியாவது இடப்பெறும். இல்லையேல் தமிழ் மக்களை மேலும் அதல பாதாளத்தில் தள்ளவே இந்தத் 'தமிழ்ப் பொது வேட்பாளர்' விடயம் எதிரிகளுக்குத் துணைபோகும்.

'தமிழ்ப் பொதுவேட்பாளர்' விடயம் ஓர் இலக்கற்றதாகும். கண் பார்வையிழந்த குருடன் எய்த இலக்கற்ற அம்பாகும்.

# அமெரிக்க அதிபர் தேர்தலில் விண்வெளியில் இருந்தே வாக்களிக்கும் சுனிதா வில்லியம்ஸ்





சர்வதேச விண்வெளி நிலையத்தில் சிக்கியுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸூம் , நாசா விஞ்ஞானியான பட்ச் வில்மோரும் அங்கிருந்தே அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் வாக்களிக்கவுள்ளனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் சுனிதா வில்லியம்ஸ் தேர்தலில் வாக்களிப்பது ஒவ்வொரு குடிமகனின் முக்கிய கடமையாகும். எனவே, நான் விண்வெளியில் இருந்தபடியே அதிபர் தேர்தலில் வாக்களிக்கவிருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை பட்ச் வில்மோரும், அதிபர் தேர்தல் வாக்குச் சீட்டுக்காக விண்ணபத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் போயிங் உருவாக்கியுள்ள ஸ்டார் லைனர் விண்கலம், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோருடன் சர்வதேச விண்வெளி நிலையத்தை கடந்த ஜீன் 5-ஆம் திகதி சென்றடைந்தது. அது தான் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு நபர்களை ஏற்றிச் சென்ற இரண்டாவது தனியார் நிறுவன விண்வெளி ஓடம் ஆகும்.

ஒன்பது நாள்கள் அந்த நிலையத்தில் தங்கியிருந்து விட்டு ஸ்டார் லைனர் மூலமே அவா்கள் இருவரும் பூமிக்குத் திரும்புவதாக இருந்தது. இருந்தாலும், தொழில்நுட்பக் கோளாறு காரணாக அவர்களால் திட்டமிட்டபடி பூமி திரும்ப முடியவில்லை.

ஸ்டார் லைனரில் ஆள்களை அழைத்து வருவது அச்சுறுத்தல் நிறைந்தது என்பதால் சுனிதாவும் பட்ச் வில்மோரும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன விண்கலம் மூலம் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் பூமிக்குத் திரும்புவார்கள் என்று நாசா அறிவித்தது. யாரையும் ஏற்றாமல் ஸ்டார் லைனர் விண்கலம் மட்டும் கடந்த வாரம் பூமி திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## Chemistry & Math Tutoring

An Ontario-certified teacher with several years of experience teaching / tutoring Chemistry (Grades 11 & 12) and Math (Grades 9-12) would be available to help high school stu dents in the same subjects for the academic year 2024/2025.

Contact 416 438-9157 (Home)
647 302-1763 (Cell)
email: mvignes11@gmail.com

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

13 செப்டம்பர் 2024 -20 செப்டம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினசிங்கம் மதியழகன்

புங்குடுதீவு 7ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 28 செப்டம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### செல்வன் சரண் செல்வகுமார்

கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் சரண் செல்வகுமார் (Bsc) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 18 செப்டம்பர் 2024 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பெற்றோர்கள், உறவுகள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் சரண் செல்வகுமார் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது பெற்றோர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செல்லத்துரை பூவின்பராணி

திருகோணமலையைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 23 செப்டம்பர் 2024 திங்கள் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அன்றைய தினம் திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## ஜனாதிபதி - சார்ள்ஸ் சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்டத் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான சார்ள்ஸ் நிர்மலநாதனை மன்னார் தாழ்வுபாடுவில் உள்ள அவரின் இல்லத்தில் 17 செப் 2024 செவ்வாய்க் கிழமை சந்தித்தார்.

இதன் போது ஜனாதிபதியை சார்ள்ஸ் நிர்மலநாதன் அன்புடன் வரவேற்றதுடன் சமகால அரசியல் விவகாரங்கள் குறித்து சிறு உரையாடலில் ஈடுபட்டனர். இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் அகில இலங்கை இளைஞர் அமைப்பின் உப தலைவர் சட்டத்தரணி தினேஷ் தலைமையில் பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் குழுவினர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியின் வெற்றிக்காக தம்மை அர்ப்பணிப்பதாக அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

இது இவ்வாறிருக்க வன்னி மாவட்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதியின் அரசியல் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கம் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றது. ஆனால் அதற்கு நான் உடன்பாடில்லை. அது ஒரு விசப் பரீட்சை. நான் வன்னி மக்களின் கருத்துகளை கேட்டறிந்துள்ளேன். அவர்களது நிலைப்பாடு தான் எனது நிலைப்பாடும் என அவர் முன்னதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் மறைமுக ஆதரவு இவருக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



07 செப்டம்பர் 2024சனிக்கிழமை கனடாவாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றத்தின் 22வது ஆண்டு ஞானதீபம் கலைவிழா அன்பளிப்பாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



08 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவைச் சேர்ந்த திரு திருமதி மயூரன் ஜெனிரா இணையர்களது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



14 செப்டம்பர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசுக்கும் திரு திருமதி விவேக் சோபனா இணையர்களது செல்வப்புல்வி மீரா விவேக்கின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி மீராவும் அவரது பெற்றோர்களும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.



17 செப்டம்பர் 2024 செவ்வாய்க்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



18 செப்டம்பர் 2024 புதன்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் சரண் செல்வகுமார் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்களும் உறவுகளும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 செப்டம்பர் 2024 வெள்ளிக்கிழமை வேலணை கிழக்கைச் சேர்ந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 34வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள், சகோதரங்கள் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## ஆரோடு நோவேன்? ஆர்க்கெடுத்துரைப்பேன்?

ஈழப் போர் முடிந்து 15 ஆண்டுகள் கடந்து விட்டது. இந்தப் போரில் பங்கெடுத்த முன்னாள் போராளிகள் இப்போது எப்படியிருக்கிறார்கள்? குறிப்பாக, தங்கள் இளமையையும் வாழ்க்கையையும் சமூகத்துக்காக, இனத்துக்காக, மண்ணுக்காக தியாகம் செய்த பெண் புலிகளின் வாழ்க்கை எப்படியிருக்கிறது?

'விடுதலைப் புலிகள்' நடத்திய 'வெளிச்சம்' பத்திரிகையின் ஆசிரியரும் ஈழக் கவிஞருமான கருணாகரன் எழுதுகிறார்.

கடந்த வாரம் ஏழு பெண்களைச் சந்தித்தேன். எல்லோருக்கும் வயது நாற்பதுக்கு மேல். சிலர் ஐம்பதைத் தொடும் நிலையிலிருக்கிறார்கள். அருவி (வயது 46), வெற்றிமலர் (வயது 48), நிலா (வயது 46), அறிவுமங்கை (வயது 45), நிலவழகி (வயது 48), மலரினி (வயது 49), செந்நிலா (வயது 50). எல்லாமே எதிர்பாராத சந்திப்புகள். ஏழு பேருக்கும் இன்னும் திருமணம் ஆகவில்லை.

இருபது, இருபத்தைந்து ஆண்டுகளாக இவர்களோடு பழகி வந்திருக்கிறேன். சிலரோடு சில சந்தர்ப்பங்களில் சேர்ந்து வேலையும் செய்திருக்கிறேன். என்ன துணிச்சல்! எவ்வளவு ஆற்றல்! எப்படியான திறமை! நாம் எதிர்பார்த்தேயிராத வகையில் எந்த வேலையையும் வலு சிம்பிளாகச் செய்து முடித்து விடுவார்கள். எதிர்பாராத கோணங்களில் அசாத்தியமான முடிவுகளை எடுப்பார்கள். அத்தனை சிந்தனைத் திறன், அவ்வளவு விவேகம்.

அருவி– பின்தங்கிய ஒரு கடலோரக் கிராமத்தில் பத்துப் பன்னிரண்டு வயதுப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாள். அவளுக்கு ஒரு கை இல்லை. அந்தப் பிள்ளைகள் கொடுக்கும் சிறிய தொகைப் பணமே அவளுடைய தேவைகளுக்கானது.

வெற்றிமலர்– இவளும் ஒரு கடலோரக் கிராமத்தில் தானிருக்கிறாள். வீட்டுக்குத் திரும்பிய பிறகு தையல் பழகி, அதன் மூலம் சீவியத்தை ஓட்டுகிறாள்.

நிலா– சில காலம் பழகிய தொழிலான வீடியோ எடிற்றிங்கைப் பல கடைகளில் செய்தாள். எல்லோரும் மிகக் குறைந்த ஊதியத்தையே கொடுத்தார்கள். ஒரு காலம் நிறைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் குறும்படங்களையும் உருவாக்கியவள். அவளுடைய திறமைகளைப் புரிந்து கொள்ளவோ கொண்டாடவோ யாருமே இல்லை. பேசாமல் தோட்டத்தில் புல்லுப்பிடுங்கவும் வெங்காயம் நடவும் போகிறாள். வயிறொன்று இருக்கிறதல்லவா. அதை விட ஒவ்வொரு நாளையும் எப்படியோ போக்கிக் கொள்ள வேண்டுமே!

அறிவுமங்கை,– இதழியல், அச்சு, வடிவமைப்பு போன்றவற்றில் அனுபவம் கொண்டவள். இந்தத் துறையில் எங்காவது வேலை செய்யலாம் என்று செய்து பார்த்தாள். அடிமாட்டுச் சம்பளம் கொடுக்கிறார்கள். கடையொன்றில் வேலை செய்தாள். அங்கும் கெடுபிடிகள் அதிகம். ஒன்றுமே சரிப்பட்டு வரவில்லை. எல்லோரும் அவளைப் பயன்படுத்தும் அளவுக்கு அவளுடைய திறன்களுக்கான மதிப்பையும் ஊதியத்தையும் கொடுக்கத் தயாரில்லை. தனியாக ஒரு இடத்தில் அச்சு வடிவமைப்பைச் செய்யலாம் என்று முயற்சித்துக் கொண்டிருக்கிறாள்.

நிலவழகி,– எதையும் கூருணர்வோடு அணுகும் திறனுள்ளவள். இடுப்புக்குக் கீழே இயங்க முடியாதிருக்கிறார். அதனால் எங்குமே செல்வதில்லை. ஒரு சிறிய வீட்டின் ஒதுக்குப் புறத்தில் உள்ள அறையே அவளுடைய பேருலகம். அமைதியான சுபாவம். சிரிப்பினால் எல்லாவற்றையும் சமன் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறாள். நெருங்கிய உறவுகள் என்று எதுவுமில்லை. தெரிந்தவர்களின் அனுசரணையில் வாழ்க்கை ஓடுகிறது. ஆனால், இதுவும் எவ்வளவு காலத்துக்கு இப்படியிருக்கும் என்று தெரியவில்லை என்கிறார்.

அதனால், இடுப்புக்குக் கீழே இயங்க முடியாத போராளிகளுக்காக இயங்கும் விடுதி ஒன்றில் (இது புலம்பெயர்ந்தோரினால் நடத்தப்படுவது) இடம் கேட்டு விண்ணப்பித்திருக்கிறாள். கிடைத்தால் போய் விடுவேன் என்றாள். அவளுக்கென்றொரு காணி வன்னியில் உண்டு. ஆனால், அதில் ஒரு வீட்டைப் போட்டுக் கொண்டு இருப்பதற்கு இன்னும் முடியவில்லை. அவளும் எத்தனையோ வழிகளால் முயற்சித்து விட்டாள். ஆனாலும் எதுவுமே கை கூடவில்லை.

மலரினி,– காலில் பெரிய காயம். சீராக நடக்க மாட்டாள். அதைவிட வயிற்றிலும் பெருங்காயங்களின் தளும்பும் உள் வலியும் இன்னும் உண்டு. ஒரு திருமணம் ஏற்பாடாகி வந்திருக்கிறது. ஆனால், அந்த மணவாளன் தன்னைப் பற்றிய விவரங்களை முழுதாகவே மறைத்து அவளைத் திருமணம் செய்ய முற்பட்டிருக்கிறான். இறுதியில் தான் தெரிந்தது அவனுக்கு ஏற்கனவே மூன்று பிள்ளைகளும் மனைவியும் ஏற்கனவே உண்டென்று. அரும் பொட்டில் தப்பினேன் என்று சொன்னாள். இனி திருமணத்தைப் பற்றிய பேச்சே வேண்டாம் என்கிறாள்.

செந்நிலா,– ஒரு கண்ணும் ஒரு கையும் இல்லை. ஆனாலும் 'நம்பிக்கை' என்றொரு சிறிய அமைப்பை உருவாக்கி அதை நிர்வகித்துக் கொண்டிருக்கிறாள்.



முதலாவதாக இவர்கள் எதிர்த்தரப்பினால் தோற்கடிக்கப்பட்டார்கள். யுத்தத்தின் மூலம். அதைத் தொடர்ந்து சிறையிலடைக்கப்பட்டனர். மீள வேண்டியிருந்தது. இரண்டு, மூன்று ஆண்டுகள் சிறையிருந்தே மீள வேண்டியிருந்தது.

மீண்ட பெண்களைத் தமிழ்ச் சமூகம் தோற்கடிக்கிறது. அது நோக்கும் நிலை குறித்து, நடத்தும் விதம் குறித்து இங்கே நாம் எழுதித் தீரா

இவர்களுக்குரிய வாழ்க்கையை அளிப்பதற்கு, இவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு, இவர்களும் மகிழ்ந்திருப்பதற்கு, மிஞ்சிய காலத்தை இவர்கள் இயல்பாக மற்றவர்களோடு கலந்து கொண்டாடுவதற்கு நம்மிடத்திலே ஏதாவது வழி உண்டா?

சிந்தியுங்கள் உறவுகளே! சமூக அமைப்புகளே! இன்னும் காலம் தாழ்ந்து போகவில்லை! வாருங்கள் வாழ வைப்போம்!



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
மகளிர் கல்லூரி பழைய
மாணவர்கள் பெருமையுடன்
வழங்கும்

# இயல்–இசை–நாடகம்

## இரண்டு நாட்கள்

SEPTEMBER 28 SATURDAY 6:00 PM

SEPTEMBER 29 SUNDAY 6:00 PM

கல்லூரி கீதம்

சொல்லாடல்
எந்த திருமணம்?

நகைச்சுவை
கனடாவில் சக்கடத்தார்

நாடகம்
மீதினிலும் வாழ்வு

கனடிய இசை வல்லுனர்களின்
இசை இன்பம்

கவிதாநிகழ்வு
வாக்குமூலம்

நடனம்
இது நிஜமாகுமா?

முற்றிலும் புதுமையான நிகழ்வுகளுடன்,
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும்

# வானவில் 2024

**Armenian Youth Centre**
50 Hallcrown Pl. North York, M2J 1P6

தொடர்புகளுக்கு:
647-760-6689, 416-697-1317,
647-969-1154, 416-918-2464

கலாபூஷணம் சோக்கல்லோ
சண்முகம்அரங்கு

கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்

yugam radio
yugam TV

CTAA
CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION

நவரசத்தாரகை
ரூபி யோகதாசன்

கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்
யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து
பெருமையுடன் வழங்கும்

# 20வது ஆண்டு நாடகப் பெருவிழா 2024

சிரிக்க ! சிந்திக்க!! சிந்தனைக்கு விருந்தளிக்க!!!
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள்.
ரொரன்ரோ கானாவின் இன்னிசை மழை

நிகழ்ச்சி தொகுப்பாளர்
ராம் பிரசாந்

SATURDAY OCT 19 @4:30PM

**Toronto Pavilion**
190 Railside Rd,
North York, ON M3A 1A3

TICKETS: $20

Ravi 416-898 7284 / Ruby 416-670-6522

## நாடக அனுசரணை வழங்குவோர்கள்

முற்பகல் செய்யில் — K T GROUP, PRESIDENT & CEO MR. KANA SELVA, 647302 1189

தவிப்பு — CORNWALL SHIVAN TEMPLE - CANADA, 1730 VINCENT MASSEY DRIVE, CORNWALL, ON K6H 5R6, Tel : +1 416-939-4921, cornwallshivantemple@gmail.com, Web : www.cornwallshivan.ca

அடையாளம் — அக்ஷியா நகைமாளிகை, 3351 Markham Rd, Red Building, Scarborough, ON M1X 0A6

தில்லாலங்கடி — Selva Vettyvel 416.568.4301, Rishani Vettyvel 416.261.1544, VettyvelLaw

சிதம்பர சக்கரம் — Vijaya Jewellery, 3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5

100 பவுண் நகை பரிசு 647-702-2159

LISTO — Aravinth Ratnasingam, 416 668 1234

CanMore Personal Solutions — 647 613 2900

647-996-5922 — Auspicious Lotus Gold House, 35 Karachi Dr

தமிழரின் நிர்வாகத்தில் — Royal King, 416.706.0004

JEYA JEYAKANTHAN 647 309 3091 — TRUST. INTEGRITY. EXPERIENCE.

FREE Home Valuation — Shan Thayaparan 416-567-7675

TOP PRODUCER FOR LAST 5 YEARS 2019/2020/2021/2022/2023 — HOMELIFE — Abi 416.732.1810, Amal 416.829.9993

Royal Fashions — Tel : 416.519.1119, Cell : 416.358.5478

NEW PREMIUM STONE LTD — Quartz, Granite, Countertop — 416.858.1290, 100 Melford Dr, Unit #1, Scarborough, ON M1B 2G4

TIMES IRON WORKS INC.

கனகாம்பிகை 416-269-7198

RAGI KUMAR — EAST WEST Accounting Consultants 289-660-7500

Queens Palace Banquet Hall — Vassant, Deepa — EAST TOWN

YOUR INTEREST IS MY CAPTIAL — Sri Sivasubramaniam — CELL: 416-884-3991

Chapel Ridge Funeral Home & Cremation Centre — Christeen Seevaratnam 416-258-6759

Finch Warden Medical Clinic — Dr. M. Selvanantham, Dr. N. Thamotharam — 3438 Finch Avenue East, Scarborough, ON M1W 2R5

THAMIZHA

INCOME TAX SERVICE — Thanam Kanagaratnam, Tax Analyst, 416 (298-6718)

LOTUS Funeral and Cremation Centre — Patricia Peter 416-834 5753

RE/MAX — LAND KING — Specialized in Development Land Sales — JEGAN 416 666 9777

JRB universal inc — R.R.Rajkumar 647-289-6164

ALOE FRESH BEAUTY SPA — 100 % Natural — 416-787-1398 — www.vashasproduct.ca

OPTIMART — 3351 MARKHAM RD, SCARBOROUGH; 3150 EGLINTON AVE E, SCARBOROUGH; 1901 HARWOOD AVE N, AJAX

GET YOUR HST REBATE — DEVADAS LAW — Vina Devadas — 416.266.1234 — 1415 Kennedy Road, Unit 3, Toronto, Ontario, M1P 2L6

Mohan Remisiar — 416.528.0372 — RE/MAX ACE

RUBY AND RUBY SAREE PALACE

JSAREES 647-857-7378 Unit#D9 2900 Markham Rd


SEP 28 2024
SATURDAY @ 5:30 PM
VIBRANT HOSPITALITY GROUP
WORLD ACTION FOUNDATION
Punch Sockalingam
BROKER
416.786.2463
416.PUNCH ME
நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
நந்தா உணவகம்
NANTHA TAKEOUT & CATERING
timeFM
416 613 9515
CTS BUILDING SUPPLIES LTD
TIMBER MART
733 Progress Ave, Scarborough, ON M1H 2W7
SEVENOTES
Rahul Nambiar
PLAYBACK SINGER
Janani Bharadwaj
PLAYBACK SINGER
ஊடகப்போராளி
MEDIA WARRIOR
வழங்கும்
9TH ANNUAL
EASY Entertaining Night 2024
BUY | INVEST | SELL
RE/MAX
RAJEEV
905.226.8515
EAST•WEST
289-660-7500
TOP PRODUCER
FOR LAST 5 YEARS
Abi
Amal
416.732.1810
416.829.9993
GREEN
SANGEEVAN THANAPALASINGAM
416.930.8780
RE/MAX
JENITHA LENIN
Salesperson
416-721-5100
Frontier
International Women's Day
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
FREE Home Valuation
Shan Thayaparan
416-567-7675
THIVIYA RATNARAJAH
647-280-5696
RE/MAX
Vaheesan
Jeyaveerasingam
Dir: 416.276.9999
ARABI
RAGEEF SUBRAMANIAM
CHRISTEEN SEEVARATNAM
VIA cibo
808 York Mills Rd, Toronto, ON M3B 1X8
(647) 352-7556
Thamil Isai Kalaamanram
Unit# 3, 1120 Tapscott Road, Scarborough, Ontario M1X 1E8
For Info: 416-414-5562 | easy24newskiruba@gmail.com
வழிகாட்டி
416-615-4646
HDAV
SOUND · LIGHTING · STAGE · VIDEOWALL
MOBILE STAGE RENTAL
JRB
R.R.Rajkumar
647-289-6164
PACE LAW
Poorany Sornabala
647-968-7059
Ambika Jewellers
Hot Line
416.620.0008
TAMIL COMMUNITY CENTRE
SANTHA PANCHALINGAM
THAYA
416.356.2013
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
LAKERIDGE
647-448-9266
Kajan Kasippillai
416-930-4608
DHURGA
416-802-9782
ARTREUM HOMES INC.
LUXURY CUSTOM HOME BUILDER
416 900 6000
Senthil
Sabarina
GRAND
RE/MAX
Raj Nadarajah
RE/MAX EXCEL
MG MOTORS
416-616-4054
Krishna Punniyam
YOUR FRIENDLY NEIGHBORHOOD REALTOR
416-558-2551
JAY NADARAJAH
INCOME TAX SERVICE
HAYHER & VASAN
CAOUTHAMVASAN
905-461-1515
416.261.1544
JEEVA KANDIAH
JAY RETNAM
ABS-MR.SINGARAJ
N.K.S
KETHA
416 321 6429
SRC
Scarborough Rehabilitation Clinic
2950 Eglinton Ave E #4, Scarborough
416 - 335 - 1424
JAASMIN
Mary's Bridal Creation
AQUA WELLNESS
AMMA PAWN BROKER
2425, Eglinton Ave E, Scarborough ON
arotech solutions inc.
416-509-5284
www.arotechsolutions.ca
info@arotechsolutions.ca
31 Tapscott Road,Toronto, ON M1B 4Y7
ARI A. ARIARAN
CPA
RE/MAX
OMMIRA Jewellery
RE/MAX
கள்ளாம்பிகை
416-754-7198
JAY Professional Truck Training Centre
416-771-8041 & 416-299-9638
A&T Human Resources
(416)431-0644
1080 Tapscott road, Suite 28 Scarborough

# தமிழ் மக்கள் தங்களைத் திரட்டாமல் உலக சமூகத்தைத் திரட்ட முடியாது!



பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தை முதலில் முன் வைத்த மு.திருநாவுக்கரசு தமிழகத்தில் தங்கியிருப்பதனால் அவர் இந்தியாவின் ஆள் என்ற சந்தேகம். அதனால் பொது வேட்பாளரை இந்தியாவின் ப்ரொஜக்ட் என்று சந்தேகித்தார்கள். அவருக்கு நெருக்கமாக இருந்தவர்கள் பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தை தொடர்ந்து வளர்த்துச் சென்றபடியால் அதுவும் இந்தியாவின் வேலையாக இருக்கலாம் என்ற சந்தேகம்.

இம்முறை தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே சுரேஷ் பிரேமச்சந்திரன் அந்த விடயத்தை கையில் எடுத்தார். அதனால் அது இந்தியாவினுடைய வேலையாகத் தான் இருக்கலாம் என்ற சந்தேகத்தை முன் வைத்தவர்கள் மேலும் உஷாரானார்கள். அதன்பின் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரு காணொளி ஊடகத்தின் அனுசரணையோடு இயங்கிய ஒரு குடிமக்கள் சமூகம் பொது வேட்பாளர் தொடர்பாக கருத்தரங்குகளை நடத்தியது.

அக்குடிமக்கள் சமூகத்தின் பிரதானியாக இருப்பவர் 13ஆவது திருத்தத்தை தொடர்ச்சியாக ஆதரித்து வருபவர். அவர் அதை வெளிப்படையாகத் தான் செய்கிறார். எனவே அந்தச் சிவில் சமூகம் இந்த விடயத்தைக் கையில் எடுத்த காரணத்தால் அது இந்தியாவினுடைய வேலையாகத் தான் இருக்க வேண்டும் என்ற சந்தேகம் மேலும் அதிகரித்தது. முடிவில் பொது வேட்பாளரை முன்னிறுத்துவதற்கு ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கிய பொழுது.அதில் உள்வாங்கப்பட்ட பெரும்பாலான கட்சிகள் இந்தியாவுக்குக் கடிதம் எழுதியவை. அதனால் சந்தேகம் மேலும் கூடியது.

மேற்சொன்ன சந்தேகங்கள் அவ்வளவும் போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு. எதுக்கெடுத்தாலும் இந்தியாவின் சதி என்று குற்றஞ்சாட்டும் அக்கட்சியானது பொது வேட்பாளர் என்ற விடயம் இந்தியாவின் அனுசரணையோடு மேடையேற்றப்படும் நாடகம் என்று கூறிவருகிறது.

அதேசமயம் பொது வேட்பாளரைக் கண்டு பயப்படும் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணியானது அதனை வேறு விதமாக அணுகியது. சுமந்திரன் இந்தியத் தூதுவரை சந்தித்து பொது வேட்பாளர் தொடர்பாகவும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் அவர் தெரிவித்த கருத்துக்களை தனக்கு விசுவாசமான பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளியே கொண்டு வந்தார். அந்தச் செய்திகள் யாவும் இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை தென்னிலங்கையில் உள்ள யாரோ ஒரு வேட்பாளரோடு பேச்சுவார்த்தைக்கு போகுமாறு கேட்கிறது என்பதைச் சாராம்சமாகக் கொண்டிருந்தன.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இலங்கைக்கு வந்த எந்த ஒரு இந்திய பிரதானியும் இதுவரை பொது வேட்பாளருக்கு ஆதரவாக கருத்து தெரிவிக்கவில்லை என்பதே தொகுக்கப்பட்ட அவதானிப்பு ஆகும்.

தமிழரசு கட்சிக்குள் சிறீதரன் அணி பொது வேட்பாளரை வலிமையாக ஆதரிக்கிறது. சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான மோதலுக்குள் பொது வேட்பாளர் எப்பொழுதோ சிக்கி விட்டார். இந்நிலையில் சிறீதரனை பலவீனப்படுத்துவதற்காகவும் பொது வேட்பாளரைப் பலவீனப்படுத்துவதற்காகவும் இந்தியா பொதுவேட்பாளர் என்ற தெரிவைக் குறித்து மகிழ்ச்சியாக இல்லை என்ற செய்தியை சுமந்திரனுக்கு நெருக்கமான பத்திரிகைகள் அடிக்கடி பிரசுரித்தன. அதன் மூலம் சிறீதரன் இந்தியாவுக்கு விருப்பமில்லாத ஒரு விடயத்தை செய்கிறார் என்பதை அவருக்கு குறிப்பாலுணர்த்த முற்பட்டன.

ஆனால் இந்த இடத்தில் அப்பாவித்தனமான ஒரு கேள்வி எழும். பொது வேட்பாளர் இந்தியாவின் ப்ரொஜக்ட் என்றால் பிறகு ஏன் இந்திய ராஜதந்திரிகளும் பிரதானிகளும் அவ்வாறு கருத்து தெரிவிக்கின்றார்கள்?

கடந்த வாரத்துக்கு முதல் வாரம் இந்திய பாதுகாப்புத் துறை ஆலோசகர் அஜித்குமார் டோவால் கொழும்புக்கு வந்திருந்தார். அவர் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார். அச்சந்திப்பின் போது அவர் பொது வேட்பாளருக்கு எதிராகக் கருத்து தெரிவித்ததாக செய்திகள் வெளி வந்தன. சந்திப்பில் தமிழ்த் தேசியப் பொதுக் கூட்டமைப்பு அதாவது பொது வேட்பாளரை முன்னிறுத்தும் பொதுக் கட்டமைப்புக்குள் அங்கும் வகிக்கும் கட்சிகளும் கலந்து கொண்டன. எனவே அக்கட்சிகளுக்கும் அவர் சொன்ன செய்தி அதுதான். இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்பதனை அவர்கள் மறைமுகமாக உணர்த்த முற்படுகின்றார்கள். இந்தியாவின் பாதுகாப்புத்துறை ஆலோசகர் அவ்வாறு கூறிய பின்னரும் அது இந்தியாவின் ப்ரொஜக்ட் தான் என்று நம்புகிறவர்கள் இப்பொழுதும் நாட்டில் உண்டு.

இந்த விடயத்தோடு தொடர்புடைய மற்றொரு சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் அதிகாரிகள் கிளிநொச்சிக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகிய சமத்துவ கட்சியின் தலைவர் சந்திரகுமாரை சந்தித்திருக்கிறார்கள். அதன்பின் ஒரு தொகுதி ஊடகவியலாளர்களையும் சந்தித்திருக்கிறார்கள். மேற்படி சந்திப்பானது சிறீதரனுக்கு சில செய்திகளை உணர்த்தும் நோக்கிலானது என்று அரசியல் வட்டாரங்களில் ஊகிக்கப்படுகின்றது. சிறீதரனுடைய பலமான கோட்டையான கிளிநொச்சியில் அவருடைய அரசியல் எதிரியான சந்திரகுமாரை அவருடைய அலுவலகத்திலேயே இந்தியத் துணைத் தூதுவர் தேடிச்சென்று சந்தித்து அவருக்கு ஒரு அந்தஸ்தை கொடுத்தமை என்பதும். சந்திப்பின் போது சஜித் பிரேமதாசாவை ஆதரிக்குமாறு சூசகமாக வலியுறுத்தியமை என்பதும் சிறீதரனுக்கு சில விடயங்களை உணர்த்தும் நோக்கிலானவை. அதாவது பொது வேட்பாளரின் விடயத்தில் இந்தியா ஆதரவாக இல்லை. எனவே பொது வேட்பாளருக்கு எதிராக சஜித்தை ஆதரிக்கும் சந்திரகுமாரை தேடிச் சென்று சந்தித்த தன் மூலம் இந்தியா சிறீதரனுக்கு

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



மறைமுகமாக அழுத்தம் கொடுக்க முற்படுகின்றதா? எனினும் அச்செய்தி வெளிவந்த பின்னர் தான் சிறீதரன் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அவருடைய கட்சி செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்ட அந்த கூட்டத்தில் மாவட்டத்தில் எவ்வாறு பொது வேட்பாளருக்கு ஆதரவான பணிகளை திட்டமிட்டுப் பரவலாக்கலாம் என்பது தொடர்பாக ஆராயப்பட்டது. அதாவது சிறீதரன் பொது வேட்பாளரின் விடயத்தில் தொடர்ந்து உறுதியாக நிற்கிறார் என்ற செய்தி அந்த கூட்டத்தில் உண்டு.

மேலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் சிறீதரனுக்கு அடுத்தடுத்த நிலையில் உள்ள முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன் கலந்து கொண்டார். அக்கூட்டத்தில் (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இந்தியாவின் தவறான அணுகுமுறை

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத் தொடரில் இலங்கை குறித்த விவாதத்தில் இந்தியாவின் சார்பில் ஜெனிவாவுக்கான இந்திய வதிவிடப் பணியக கவுன்சிலரான கௌரவ் குமார் தாக்கூர் உரையாற்றியிருந்தார்.

பேரவையின், 51-1 தீர்மானத்திற்கு அமைய ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் பணியகம் சமர்ப்பித்திருந்த அறிக்கை தொடர்பாக அந்த விவாதம் இடம் பெற்றிருந்தது.

அதில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி கௌரவ் குமார் தாக்கூர், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் ஆதரவை இரண்டு அடிப்படைக் கொள்கைகள் வழி நடத்துவதாக குறிப்பிட்டிருந்தார்.

ஒன்று சமத்துவம், நீதி, கண்ணியமான மற்றும் அமைதியான, இலங்கைத் தமிழ் சமூகத்தின் அபிலாஷைகள். இன்னொன்று, இலங்கையின் ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை.

இதன் அர்த்தம் இலங்கையின் ஐக்கியம் பிரதேச ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு பாதிப்பு ஏதும் இல்லாமல் சமத்துவமான நீதியான கண்ணியமான அமைதியான முறையில் இலங்கை தமிழ் சமூகத்தின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே ஆகும். இன்னும் கொஞ்சம் வெளிப்படையாகச் சொல்வதானால், பிளவுபடாத இலங்கைக்குள் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வு ஒன்றே இந்தியாவின் நிலைப்பாடு. பிளவுபடாத நாட்டுக்குள் சமஷ்டித் தீர்வையும் வழங்க முடியும். அதேவேளை, ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வு ஒன்றையும் காண முடியும்.

இதில் இந்தியா வலியுறுத்துவது சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை அல்ல. இந்தியப் பிரதிநிதி, கௌரவ் குமார் தாக்கூர் அதனையும் என்னவென்று குறிப்பிட்டிருக்கிறார்.

மாகாண சபைகளுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் போன்றவற்றின் ஊடாக இனப் பிரச்சினைக்கு விரிவான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

அதாவது, மாகாண சபைகளும், 13 ஆவது திருத்தச் சட்டமும் தான், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதை .ந்தியா வெளிப்படையாக மீண்டும் கூறியிருக்கிறது. இந்தியா இதனைத் தான், 1987ஆம் ஆண்டில் இருந்து கூறிக் கொண்டிருக்கிறது.

13 ஆவது திருத்தச் சட்டத்தையும், மாகாண சபைகளையும் இந்தியா தீர்வாக முன் வைத்த போது, அதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இது தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஆரம்பப் புள்ளியாக கூட இருக்க முடியாது என, அன்றைய மிதவாத தமிழ்த் தலைவர்கள் கூட அறிவித்திருந்தார்கள்.

37 ஆண்டுகளுக்குப் பிறகும், இந்தியா அதனையே தீர்வாக தமிழ் மக்களின் மீது திணிக்க முற்படுகிறது. மாகாண சபைகள், கடந்த 8 ஆண்டுகளாக செயற்படாமல் இருக்கின்றன. அதற்கு விரைவாகத் தேர்தல்களை நடத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்குமாறு இந்தியாவிடம் தமிழர் தரப்பு பலமுறை வலியுறுத்தியது. ஆனால், இந்தியாவினால் இதுவரை அதனைச் சாதிக்க முடியவில்லை.

13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது, இருந்த அதிகாரங்கள் ஒவ்வொன்றாக மத்திய அரசினால் பிடுங்கி எடுக்கப்பட்டது. அதற்கு எதிராகவும் இந்தியா வாய் திறக்கவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தை முன்பிருந்தவாறு முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழ் கட்சிகள் எத்தனையோ முறை புதுடில்லியிடம் கெஞ்சின. ஆனால் இந்தியாவினால், 13 ஆவது திருத்தச் சட்டத்தை இது வரையில் முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய முடியவில்லை.



1987 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்த்தனவினால், தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடகிழக்கு மாகாணத்தை, 2006 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து இரண்டாகப் பிரித்த போதும் இந்தியா அதனை எதிர்க்கவில்லை. அப்போதிருந்த ஆட்சியாளர்களைக் கொண்டோ அதற்குப் பின்னர் வந்த ஆட்சியாளர்களை கொண்டோ மீளவும் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபடவில்லை.

ஆனால், இலங்கை பிளவுபடக் கூடாது, அதன் இறையாண்மைக்கு பாதிப்பு வரக் கூடாது, பிரதேச ஒருமைப்பாடு சீர்குலைந்து விடக்கூடாது என்பதில் மாத்திரம் இந்தியா உறுதியான நிலைப்பாட்டில் இருந்து வருகிறது.

ஜெனிவாவில் உரையாற்றிய இந்திய பிரதிநிதி கௌரவ் குமார் தாக்கூர், இரண்டு கொள்கைகளின் அடிப்படையில், இந்தியா இலங்கை விவகாரத்தை அணுகுவதாக குறிப்பிட்டிருந்த போதும்,

இந்த இரண்டு கொள்கைகளும் சமமான வகையில் நோக்கப்படுவதாக கூறவில்லை. அவ்வாறு சமமான வகையில் நோக்கப்பட்டிருந்தால், 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த போது, அதன் அதிகாரங்கள் பறிக்கப்பட்ட போது, மாகாண சபைகள் செயலிழக்கச் செய்யப்பட்ட போது, வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்ட போது, .ந்தியா எதிர்த்து குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை.

அதே நேரம் இலங்கையின் ஐக்கியம், இறையாண்மைக்கு அச்சுறுத்தல் வந்து விடக் கூடாது என்பதற்காக, நாடு பிளவுபட்டு விடக் கூடாது என்பதற்காக, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்கு முண்டு கொடுத்தது. தமிழரின் ஆயுதப் போராட்டத்தை அழித்தொழிப்பதற்கும் துணையாக இருந்தது. ஆகவே இந்தியா இந்த இரண்டு கொள்கைகளுக்கும் சம அளவில் முக்கியத்துவம் கொடுக்கும் நிலைப்பாட்டில் இல்லை என்பதே உண்மை. இந்தப் பின்னணியை புரிந்து கொண்டு தான், .இந்தியா முன்வைக்கின்ற தீர்வை கவனத்தில் எடுக்க வேண்டும்.

தமிழர் தரப்பையும், இலங்கை அரசையும் இந்தியா சமமான வகையில், நோக்குகின்ற நிலையில் இருக்குமேயானால், இந்தியா முன் வைக்கின்ற யோசனைகளை கவனத்தில் எடுக்க வேண்டிய கருத்தில் கொள்ள வேண்டிய கடப்பாடு தமிழர்களுக்கு உள்ளது.

ஆனால் நிலைமை அவ்வாறில்லை.

இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல்கள் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கும் என நம்புவதாகவும், இந்திய பிரதிநிதி கௌரவ் குமார் தாக்கூர் ஜெனிவாவில் தெரிவித்திருந்தார்.


அதன் அர்த்தம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்கி மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்து அவற்றை மீள இயக்குவதன் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதே ஆகும். இங்கு நல்லி ணக்கம் என்பதற்கும் அதிகாரப்பகிர்வு என்பதற்கும் இடையில் ஒத்த இயல்பு இருப்பதாக கருத முடியாது.

நல்லிணக்கம் என்பது பரந்துபட்ட ஒரு விடயம். தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்கிறார்கள். அது தொடர்பான தங்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். தங்களை நிலத்தில் தாங்கள் நிம்மதியாக வாழுகின்ற நிலை ஏற்பட வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறார்கள். தங்களின் நிலங்கள் அபகரிக்கப்படாமல், பாதுகாப்பானதாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளவும் பறிக்கப்படக் கூடாது என்று எதிர்பார்க்கிறார்கள்.

தங்களுக்கு நேரிட்ட அக்கிரமங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் அநீதிகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அத்தகைய அநீதிகள் மீளவும் இடம்பெறக் கூடாது என்று எதிர்பார்க்கிறார்கள். அதற்கான உத்தரவாதம் தமக்கு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும், குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனையும் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதன் மூலம் தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமே தவிர, வெறுமனே 13 ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கமும், மாகாண சபைகளும் அதனை உருவாக்கி விடமாட்டாது. இந்தியாவிற்கு இது தெரியாத ஒன்று அல்ல.

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபைகளின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றால், 1987 ஆம் ஆண்டிலேயே அது சாத்தியமாகியிருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் தான் நல்லிணக்கத்தை அடைவதற்கு இது போன்ற புதுப்புது வழிகளை கண்டு பிடிப்பார்கள். இந்த புரிதலுடன் தான் சஜித் பிரேமதாச 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தி மாகாண சபைகளுக்கு அதிக பட்ச அதிகாரங்களை வழங்குவதாக கொடுத்திருக்கும் வாக்குறுதியின் அடிப்படையைப் பார்க்க வேண்டும்.

அந்த வாக்குறுதிகளின் அடிப்படையில் தான், தமிழ் அரசு கட்சி உள்ளிட்ட சிறுபான்மை கட்சிகளை சஜித் பிரேமதாசாவிற்கு பின்னால் கொண்டு சென்று இணைக்கப்பட்டிருக்கலாம். இந்த அடிப்படையில் தான் ஜெனிவாவிலும் இந்தியாவில் கருத்து எதிரொலித்திருக்கிறது.

13ஆவது திருத்தச் சட்டமும் மாகாண சபைகளும் தமிழர்களுக்கு முக்கியமானவை என்றாலும், அவற்றுக்கு அப்பால் தமிழ் மக்களின் உண்மையான அபிலாசைகளும் எதிர்பார்ப்புகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதனை புறக்கணித்து விட்டு இந்த இரண்டையும் செயற்படுத்துவதன் ஊடாக நல்லிணக்கத்தையும் அமைதியையும் உருவாக்க முடியும் என்று இந்தியா நினைத்தால் மீண்டும் ஒரு முறை இலங்கை விவகாரத்தில் அது தவறான அணுகுமுறைகளைக் கையாள முற்படுகிறது என்றே கொள்ளவேண்டும்.

மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட கனேடிய பிரஜாவுரிமை பெற்ற இந்து மதத்தைச் சேர்ந்த குல மகளுக்கு பெற்றோர்கள் தகுந்த வரன் தேடுகின்றனர். உயரம் 5 அடி 4 அங்குலம்.

Born in 1989 & Non Vegetarian

Doctor of Medicine (MD) – Doing Residency in USA

Proposal from Canada, USA - (From UK, Australia, Sri Lanka & other Countries who is willing to relocate to USA also will be considered)

தொடர்புகளுக்கு: 416 282 1619 அல்லது
416 953 8297(Mobile/WhatsApp/Viber)

Email. Kandiah4u@hotmail.com

# தமிழ்ப் பொதுவேட்பாளர் வித்தியாசமானவர்



ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தமிழ்த் தேசியப் பொதுக்கூட்டமைப்பின் தேர்தல் அலுவலகத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்கள். அந்த அலுவலகம் ஏனைய வேட்பாளர்களின் தேர்தல் அலுவலகங்களைப் போல பகட்டாக, அட்டகாசமாக இருக்கவில்லை. அங்கே பிரம்மாண்டமான போஸ்டர்கள், பதாகைகள் எவையும் இருக்கவில்லை. பொது வேட்பாளரின் ஒரே ஒரு சுவரொட்டி மட்டும் இருந்தது. அதுவும் வீட்டுக்குள்ளே ஒரு குளிரூட்டியில் ஒட்டப்பட்டிருந்தது. அந்தச் சுவரொட்டி யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஒட்டப்படுகின்ற எல்லாச் சுவரொட்டிகளை விடவும் எளிமையானது. சிறியது. கவர்ச்சி குறைந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தம்மைச் சந்தித்த மக்கள் அமைப்பினரிடம் கேட்டார்கள், உங்களுடைய பொது வேட்பாளரைப் பற்றிக் கதைக்கும் பொழுது உங்களுடைய அரசியல்வாதிகளும் கட்சித் தலைவர்களும் பொது நிலைப்பாடு, பொதுக் கொள்கை என்றுதான் உரையாடுகிறார்கள்.ஒரு நபராக அவரைப் பற்றி உரையாடுவது குறைவாக இருக்கிறதே, ஏன்? என்று

அக்கேள்வி சரியானது. தேர்தல் கண்காணிப்பாளர்கள் கூர்மையாக அவதானித்துள்ளனர். பொது வேட்பாளர் ஒரு குறியீடு. அவர் தமிழ்ப் பொது நிலைப்பாட்டின் குறியீடு. இங்கு தமிழ்ப் பொது நிலைப்பாடு தான் முக்கியம். அதை முன்னிறுத்தும் நபர் அல்ல. ஏற்கனவே தமிழ் அரசியலில் அப்படி ஒரு பாரம்பரியம் இருந்து. கொள்கைக்காக நபர்களை முன்னிறுத்தாத ஒரு பாரம்பரியம். கொள்கைக்காக நபர்கள் தங்களைத் திரை மறைவில் வைத்துக் கொண்ட ஒரு பாரம்பரியம். கொள்கைக்காக தனிப்பட்ட சுகங்களையும் தனிப்பட்ட புகழையும் தியாகம் செய்யும் ஓர் அரசியல் பாரம்பரியம். அரியநேத்திரன் அந்த பாரம்பரியத்தின் அடிப்படையில், தன்னை முன்நிறுத்தாமல் தான் முன்னிறுத்தும் கொள்கையை முன் நிறுத்துகின்றார்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்குரிய பிரச்சார செலவுகளை பற்றியும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கேட்டிருக்கிறார்கள். பெருமளவுக்குத் தன்னியல்பாக, தன் எழுச்சியாக மக்கள் செலவு செய்வதைக் குறித்து அங்கே கூறப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவின் தேர்தல் வரலாற்றில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடையம் பல்வேறு பரிமாணங்களில் புதுமையானது வித்தியாசமானது.

முதலாவதாக பொது வேட்பாளர் என்ற நபரை முன்னுறுத்தி பிரச்சாரங்கள் செய்யப்படுவது குறைவு. ஒரு பொது நிலைப்பாடு ஆகிய "தேசமாகத் திரள்வது'' என்றுதான் பெரும்பாலான பிரச்சாரங்களில் கூறப்படுகின்றது. தன் முனைப்போடு வேட்பாளர்கள் தங்களை முன்னுறுத்தி, தங்களுடைய முகத்தை முன்னிறுத்தி தங்களுடைய புகழை முன்னிறுத்தி வாக்குக் கேட்கும் ஒரு பாரம்பரியத்தில் தன்னை முன்னிறுத்தாத அதாவது ஒரு ஆளை முன்னுறுத்தாத, அதேசமயம் கொள்கையை முன்னிறுத்தும், ஒரு தெரிவு தான் பொது வேட்பாளர்.

இரண்டாவது, ஏனைய வேட்பாளர்களோடு ஒப்பிடுகையில் மிகக் குறைந்த அளவு பணம் செலவழிக்கப்படும் பிரச்சார நடவடிக்கை பொது வேட்பாளருடையது தான். பொது வேட்பாளருக்காக பிரசுரிக்கப்படும் துண்டுப் பிரசுரங்கள் சுவரொட்டிகள் போன்றவை ஒப்பீட்டளவில் மலிவானவை, செலவு குறைந்தவை. இடதுசாரி மரபில் வந்த ஜேவிபி அட்டகாசமான சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றது. அந்தச் சுவரொட்டிகள் விலை கூடியவை, அளவால் பெரியவை. பொது வேட்பாளரின் சுவரொட்டிகள் அதற்குக் கிட்ட வர முடியாத அளவுக்கு சிறியவை, மலிவானவை. யாழ்ப்பாணத்தில் ஒரு பல வர்ணச் சுவரொட்டி, ஆனால் மலிவான விலையில் அடித்தால், குறைந்தது 12 ரூபாய்கள் தேவை. ஆனால் அதை ஒட்டுவதற்கு கொடுக்கப்படும் செலவு அதை விட அதிகம் என்று கட்சிகள் கூறுகின்றன. ஒரு சுவரொட்டி ஒட்டுவதற்கு சில சமயம் ஆகக்கூடியது 15 ரூபாய் தேவைப்படுகிறது என்று ஒரு கட்சித் தொண்டர் சொன்னார். ஒட்டும் ஆட்களுக்கு சாப்பாடு, பயணச் செலவு போன்ற எல்லாச் செலவுகளையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், சுவரொட்டியை விட அதை ஒட்டும் செலவு அதிகமாக இருக்கும் ஒரு தேர்தல் களம் இது.

மூன்றாவது, வேறுபாடு, எனைய பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எல்லா மாவட்டங்களிலும் நூற்றுக்கணக்கான அலுவலகங்கள் உண்டு. ஆனால் தமிழ் பொது வேட்பாளருக்கு மிகச்சில அலுவலகங்கள் தான் உண்டு. தென் இலங்கையில் இருந்து வந்த ஒரு ஊடக முதலாளி சொன்னார், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த போது, சாலை நெடுக ஜேவிபியின் அலுவலகங்களை அல்லது விளம்பரத் தட்டிகளைக் காணக் கூடியதாக இருந்தது என்று. அவர்கள் மூடப்பட்ட ஒரு கடையின் முகப்பில் தங்களுடைய கட்சிக் கொடியை பறக்க விடுகிறார்கள். அல்லது கட்சிப் பதாதையைத் தொங்க விடுகிறார்கள். தாங்கள் எங்கும் நிறைந்து இருக்கிறோம் என்ற ஒரு தோற்றத்தை, உணர்வை ஏற்படுத்த அவர்கள் முயற்சிக்கின்றார்கள். என்று. அதற்கு வேண்டிய வளம் அவர்களிடம் உண்டு. ஆளணி, நிதி போன்ற அனைத்தும் அவர்களுக்கு உண்டு.

சஜித் பிரேமதாசவும் அப்படித் தான். நிறையக் காசு செலவழிக்கிறார். ரணில் ஜனாதிபதியாக இருப்பவர். சொல்லவா வேண்டும்? எல்லாருமே கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்து வருகிறார்கள். வெற்றிக்காக எத்தனை கோடியை செலவிடவும் அவர்கள் தயார். ஆனால் பொது வேட்பாளர் அப்படியல்ல. அவரிடம் அந்த அளவுக்குக் காசு கிடையாது. தன்னார்வமாக, தன்னெழுச்சியாக தமிழ் மக்கள் அவருக்காக பிரச்சாரம் செய்கின்றார்கள். கூட்டங்களை ஒழுங்கமைக்கின்றார்கள். உள்ளூர் வர்த்தகர்கள் கூட்டங்களுக்கு தேவையான உதவிகளைச் செய்கின்றார்கள். புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகள் உதவிகளை செய்கின்றார்கள்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இத்தேர்தல் ஒப்பீட்டளவில் அதிகம் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.புலம்பெயர்ந்த தமிழர்கள் கடந்த 15 ஆண்டுகளில் ஒப்பீட்டளவில் அதிகளவு ஒருங்கிணைந்த ஒரு புள்ளியாகவும் அது மாறியிருக்கிறது. பலர் தன்னார்வமாக தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுகிறார்கள். தமது ஊர் சங்கங்களுக்கு உதவிகளைச் செய்கின்றார்கள். பொது வேட்பாளர் தாயகத்தையும் டயஸ்போராவையும் ஒப்பீட்டளவில் ஒன்றாக்கியிருக்கிறார்.

தமிழ்ப் பொது வேட்பாளரின் பிரதான பிரச்சாரக் கோஷம் நாமே நமக்காக'' என்பதாகும். அதாவது தமிழ் மக்கள் தங்களுக்கு தாங்களே பிரச்சாரம் செய்து கொள்வது. பொது வேட்பாளருக்காக ஒவ்வொரு தமிழரும் பிரச்சாரம் செய்வது. ஏனென்றால் அது தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டி எழுப்பும் ஒரு பிரச்சாரக் களம்.

நாலாவது பிரதான வேறுபாடு, தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதியாக வருவதற்காக போட்டியிடவில்லை. அவர் ஜனாதிபதியாக வர முடியாது. ஏனென்றால் ஒரு தமிழ் குடிமகன் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியாக வருமளவுக்கு ஸ்ரீலங்காவின் ஜனநாயகம் செழிப்பானது அல்ல. அரிய நேத்திரன் ஜனாதிபதியாக வரும் கனவோடு தேர்தலில் குதிக்கவில்லை. மாறாக தேசத்தைக் கட்டி எழுப்பும் கனவோடு தான் அவர் ஒரு குறியீடாக தேர்தலில் நிற்கின்றார்.எனவே ஏனைய எல்லா வேட்பாளர்களை விடவும் தமிழ்ப் பொது வேட்பாளர் வேறுபடும் முக்கியமான இடம் இது. அவர் ஒரு குறியீடு என்பது.


தமிழ்ப் பொது வேட்பாளரைப் பொறுத்தவரை இந்தத் தேர்தல் வித்தியாசமானது. முன்னுதாரணம் இல்லாதது. தான் வெல்ல முடியாத ஒரு தேர்தலில் ஒரு குறியீடாக நிற்பது என்பது முன்னப்பொழுதும் இல்லாதது.ஒரு பொது நலனுக்காக தன்னை ஒரு குறியீடாக்கி தேர்தலை நிற்பது என்பது முன்னப்பொழுதும் நிகழாதது.

மேற்கண்ட பிரதான வேறுபாடுகளைத் தொகுத்துப் பார்த்தால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் அதிகம் படைப்புத்திறன் மிக்கதாகவும், அரசியலில் செயலூக்கம் மிக்க ஒரு தெரிவாகவும், இந்தப் பிராந்தியத்தில் ஒரு புதிய முன்னுதாரணம் ஆகவும் காணப்படுகின்றது.

**– நிலாந்தன் –**




**Friends MATRIMONY**



**www.friendsmatrimony.com**
**+1 647 709 1761 | +1 647 709 1536**
**+1 416 477 6854 | +1 647 700 7208**
**GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257**
**Toronto, M1S 0C2**



# மணமகள்

**ID08120777 (F)** 30yrs, 5'2" , Single , Swaathi , 9 Sevai , Diploma , Lab Tech , Canada

**ID08120684 (F)** 27yrs, 5'4" , Single , Rohini , 2 Sevai , Bachelors.. , Health , Canada

**ID08120662 (F)** 32yrs, 5'2" , Single , Pooraadam , 11 Sevai Bachelors.. , Product Management , Canada

**ID08120644 (F)** 29yrs, 5'7" , Single , Visaakam , 12 Sevai , Bachelors.. , Business Analyst.. , Canada

**ID08120640 (F)** 29yrs, 5'4" , Single , Kettai , 2 Sevai , Postgraduate.. , Social Media.. , Canada

**ID08120637 (F)** 31yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Analyst , Canada

**ID08120633 (F)** 38yrs, 5'2" , Single , Avittam , 2 Sevai , High School , District manager , Canada

**ID08120036 (F)** 32yrs, 5'2" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Masters Degree , Academic Advisor , Canada

**ID08119986 (F)** 37yrs, 5'3" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Doctor , Canada

**ID08119978 (F)** 28yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , Bachelors.. , Manager Hospitality.. , Canada

**ID08119833 (F)** 32yrs, 5'4" , Single , Aayilyam , 5 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08120630 (F)** 31yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Case Management.. , Canada

**ID08119986 (F)** 37yrs, 5'3" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Doctor , Canada

**ID08120771 (F)** 29yrs, 5'5" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , Software engineer , Sri Lanka

**ID08120696 (F)** 30yrs, 5'1" , Single , Thiruvonam , N/A Sevai , Masters Degree , Clinical Research.. , Canada

**ID08120686 (F)** 32yrs, 5'3" , Single , Swaathi , 2 Sevai , Postgraduate.. , Montessori.. , United States

**ID08120681 (F)** 28yrs, 5'3" , Single , Mrigasheersham , 2 Sevai , Bachelors.. , Nurse , Canada

**ID08120676 (F)** 26yrs, 5'3" , Single , Chithirai , 4 Sevai , Bachelors.. , Program Coordinator , Canada

**ID08120581 (F)** 29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 6 Sevai , Ph.D , Senior Engineer , United States

**ID08120809 (F)** 32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United Kingdom

**ID08120808 (F)** 31yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Acadamic Staff , Sri Lanka

**ID08120807 (F)** 27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Beautician.. , Sri Lanka

**ID08120806 (F)** 27yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Audit firm , Sri Lanka

**ID08120805 (F)** 30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08120804 (F)** 29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120803 (F)** 21yrs, 4'10" , Single , Not Specified , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120802 (F)** 19yrs, 5'4" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Bachelors.. , MSc intended.. , Canada

**ID08120799 (F)** 45yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120795 (F)** 31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

**ID08120794 (F)** 24yrs, 5'4" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , Dental Assistant , Canada



# மணமகன்

**ID08120717 (M)** 33yrs, 5'8" , Annulled , Thiruvonam , 6 Sevai , Bachelors.. , Financial.. , Canada

**ID08120715 (M)** 27yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Assistant.. , Canada

**ID08120709 (M)** 38yrs, 5'4" , Single , Hastham , 6 Sevai , Diploma , CNC Machine.. , Canada

**ID08120673 (M)** 35yrs, 5'11" , Single , Swaathi , 12 Sevai , Diploma , Business Owner , Canada

**ID08120642 (M)** 45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120642 (M)** 45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120616 (M)** 33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.. , Canada

**ID08120613 (M)** 32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Canada

**ID08120335 (M)** 30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08117127 (M)** 42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08113686 (M)** 45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120801 (M)** 69yrs, 5'10" , Divorced , Visaakam , N/A Sevai , Diploma , Security Officer , Canada

**ID08120751 (M)** 33yrs, 5'7" , Single , Thiruvonam , 11 Sevai , Bachelors.. , General practitioner , United Kingdom

**ID08120694 (M)** 39yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120690 (M)** 40yrs, 5'6" , Single , Swaathi , N/A Sevai , High School , Building Construction , Sri Lanka

**ID08120670 (M)** 30yrs, 5'11" , Single , Poosam , 12 Sevai , Diploma , Team leader , Canada

**ID08120639 (M)** 35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120474 (M)** 28yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , AGM , Sri Lanka

**ID08120797 (M)** 32yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , IT Consultant , Sri Lanka

**ID08120796 (M)** 30yrs, 5'7" , Divorced , Thiruvonam , 8 Sevai , High School , Truck Driver , Canada

**ID08120793 (M)** 25yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

**ID08120790 (M)** 21yrs, 4' , Single , Not Specified , N/A Sevai , High School , Casc , Anguilla

**ID08120789 (M)** 35yrs, 6'1" , Single , Rohini , N/A Sevai , High School , Tba , Canada

**ID08120788 (M)** 22yrs, 5'4" , Single , Rohini , N/A Sevai , High School , Phone shop , Sri Lanka

**ID08120787 (M)** 33yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Medical rep , Sri Lanka

**ID08120786 (M)** 36yrs, 5'5" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120785 (M)** 52yrs, 5'9" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Optician , Sri Lanka

**ID08120782 (M)** 30yrs, 6'2" , Single , Rohini , N/A Sevai , Bachelors.. , Electrical.. , Sri Lanka

**ID08120779 (M)** 35yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , High School , Company Forklift.. , Canada

**ID08120773 (M)** 46yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Elecerician.. , Sri Lanka

# தமிழ்ப் பொது வேட்பாளர்:- தமிழரை ஒன்று திரட்டவா? தமிழ்க்கட்சிகளைப் பிரிக்கவா?

பல அணிகளாகச் சிதறிக் கிடக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் எந்தப் பக்கம் செல்வது என்று தெரியாமல் தத்தளிக்கும் மக்களையும் பலவீனப் பட்டிருக்கும் தமிழ்த்தேசியத்தையும் பலப்படுத்துவதற்கே தமிழ்ப்பொது வேட்பாளர் என்று சொல்லப்பட்டது.

இதற்காக உருவாக்கப்பட்டதே தமிழ் மக்கள் பொதுச்சபையும் தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்புமாகும். இந்த நோக்கத்தின் அடிப்படையில் தான் தமிழ்ப்பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டு அதற்கான பரப்புரைகளும் அங்கங்கே நடக்கின்றன.

பொது வேட்பாளருக்காக இன்னும் பெரிய அளவிலான பொதுக்கூட்டங்கள் நடக்கவில்லை. என்றாலும் பரப்புரைகள் தொடர்கின்றன. பொதுவேட்பாளரை ஆதரிக்கும் கட்சிகளின் தலைவர்கள், பத்தி எழுத்தாளர்கள் எல்லாம் கலந்து கொண்டாலும் பரப்புரைகளில் ஆழமான, புதிய சேதிகள் எதையும் பொதுக்கட்டமைப்போ, பொதுவேட்பாளரோ சொல்லவில்லை. நடைமுறைச்சாத்தியமான விடயங்கள் கூடப் பேசப்படவில்லை. ஆனால், சொல்லப்பட்டதற்கு மாறாகத் தமிழ்ப்பொது வேட்பாளர், தமிழ்ச்சமூகத்தை ஆழமாகவே பிளவு படுத்திக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. தமிழ்ச்சமூகத்தை மட்டுமல்ல, தமிழ்க்கட்சிகளையும் அதைப் பெரும் பிளவாகக் காட்டுவதற்குப் பலர் உள்ளனர். குறிப்பாக இந்த மாதிரிப் பிரச்சினை தமிழரசுக்



கட்சிக்குள் நடக்கிறது என்றால், அதை மேடை போட்டுச் சொல்வதற்கும் அதற்கு எண்ணெய் ஊற்றி தீயைப் பற்ற வைப்பதற்கும் ஆர்வமாக இருக்கிறார்கள். என்பதால் தான், லிங்கத்தின் நினைவு நிகழ்வில் உரையாற்றும் போது மேலும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இதனால் ஓடோடிச் சென்று வாழ்த்துச் சொன்ன செல்வம், மூக்குடைபட்டுப் போயிருக்கிறார்.

இது தான் பொது வேட்பாளரை ஆதரித்து நிற்கும் தலைமைத்து தான். (பொதுவேட்பாளரை நிறுத்தினால் இதெல்லாம் நடக்கும் என ஏற்கனவே எச்சரிக்கப்பட்டிருந்தது).

பல இழுபறிகள், தடுமாற்றங்களுக்குப் பிறகு, பொது வேட்பாளரைக் கட்சி ரீதியாக ரெலோ ஆதரிக்கிறது. ஆனால், கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரும் அந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினருமான வினோநோகராதலிங்கம் பகிரங்கமாகவே அதை எதிர்க்கிறார். வினோநோகராதலிங்கத்தோடு ஒரு அணியும் இதை எதிர்க்கிறது. ஆக, ரெலோவுக்குள் இரண்டு நிலைப்பாடுகள்.

இதைப் பற்றிக் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனிடம் கேட்ட போது சொன்னார், ரெலோ ஒரு ஜனநாயகக் கட்சி என்ற அடிப்படையில், எவரும் எந்த முடிவையும் எடுக்கலாம். ஆகவே தன்னுடைய நிலைப்பாட்டைச் சொல்வதற்கு வினோவுக்கு உரித்துண்டு என.

இது அவருடைய தலைமைத்துவத் தோல்வியின் வெளிப்பாடாகும். மட்டுமல்ல, ஒப்பீட்டளவில் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்த கட்சிகளில் ஓரளவுக்கு மக்கள் செல்வாக்கைக் கொண்டிருக்கும் ரெலோவின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கும் நிலை உருவாகியுள்ளது என்று அனைவருக்கும் தெரியும்.

அதாவது, தன்னுடைய கட்சியையே பொதுவேட்பாளருக்கான முழுமையான ஆதரவு நிலைப்பாட்டுடன் நிறுத்த முடியவில்லை — செல்வம் அடைக்கலநாதனால்.

இந்தச் சீரில் எப்படிப் பொது வேட்பாளருக்கான ஆதரவை வெளியே மக்களிடத்திலும் பிற அரசியற் சக்திகளிடத்திலும் ஒன்று திரட்டுவது? அதற்கான தகுதியையை இழந்து நிற்கிறது ரெலோ.

ஆனால் இதை ஒத்த நிலைமைகள் வேறு கட்சிகளுக்குள் நடந்தால், தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை மீறி அந்தக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை எடுத்த பொதுவேட்பாளருக்கான ஆதரவைப் பாராட்டிக் கொண்டாடுவதற்காக ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அங்கே ஓடோடிச் சென்றார்.

தன்னுடைய கட்சியின் உறுப்பினர், அதுவும் பாராளுமன்றப் பிரதிநிதி ஒருவர் கட்சியின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளாமல், மறுதலித்து வெளியே நிற்கிறார். அதைப் பேசித் தீர்த்து ஒரு ஒழுங்குக் கொண்டு வராமல், அடுத்த வீட்டுப் பிரச்சினையைப் பார்க்கப் போயிருக்கிறார் செல்வம். இதைத்தான் சந்தி சிரிக்கும் சங்கதி என்பது.

கடைசியில் செல்வத்தினால் (தலைவரினால்) வினோநோகராதலிங்கத்தைக் கட்டுப்படுத்தவும் முடியவில்லை. தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் முடிவை முழுமையாகக் கொண்டாடவும் முடியவில்லை.

காரணம், தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மற்றும் கிளிநொச்சி மாவட்டக்கிளைகள் தன்னிச்சையாக எடுத்த கட்சியின் தீர்மானத்துக்கு மாறான முடிவுகள் செல்லுபடியற்றனவாகி விட்டன. இப்பொழுது தமிழரசுக் கட்சி பகிரங்கமாகவே சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது. அத்துடன், அதே பகிரங்கத் தன்மையோடு பொது வேட்பாளரை மறுதலித்துள்ளது. போதாக்குறைக்கு பொதுவேட்பாளராக நிற்கும் அரியநேத்திரன் அதிலிருந்து விலக வேண்டும். அல்லது கட்சிக்கு விளக்கமளிக்க வேண்டும் என்று காலக் கெடுவையும் விதித்துள்ளது.

இதை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா சஜித் பிரேமதாசாவுக்கு தமது கட்சி ஆதரவளிக்கும் என்று யாழ்ப்பாணத்தில் நடந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்ம வங்களின் நிலையாக உள்ளது. ஆனால் தமிழரசுக் கட்சியையும் பொது வேட்பாளர் விடயம் இரண்டாகப் பிளந்துள்ளது. ஏற்கனவே அந்தக் கட்சி உள்முரண்பாடுகளால் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அதன் விளைவாக நீதிமன்றப்படியேறி வழக்காடிக் கொண்டிருக்கிறது.

அதை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலேயே தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் இப்போதுள்ளது.

பொதுவேட்பாளரை அந்தக் கட்சியைச் சேர்ந்த சிறிதரனின் அணியினர் ஆதரிக்கின்றனர். அவருக்கு வெளியே உள்ளவர்கள் அதை எதிர்க்கின்றனர். இது கட்சியை மேலும் ஆழமாகப் பிளவு படுத்துகிறது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் இந்தப் பிளவுகள் மேலும் வலுப்பெறும் என்றே தெரிகிறது. ரெலோ, தமிழரசுக் கட்சிக்குள் மட்டுமல்ல, புளொட்டுக்குள்ளும் மோதல்கள் உருவாகக் கூடிய சூழலே உள்ளது.

பொதுவேட்பாளர் தொடர்பாக புளொட்டுக்குள் ஏற்கனவே இருவேறு நிலைப்பாடுகளுண்டு. புளொட்டின் தலைவர் சித்தார்த்தனுக்கு இதில் உடன்பாடில்லை. இதை அவர் பல தடவை நேர்ப் பேச்சுகளில் சொல்லியிருக்கிறார். கட்சியின் அடுத்த நிலையில் உள்ள சிலரின் விருப்பத்துக்கு இடமளிக்கும் வகையிலும், தாம் இணைந்து நிற்கும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்காகவுமே பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டியுள்ளது என.

எனவே ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு இந்தக் கட்சிகளுக்குள் ஏகப்பட்ட பிரச்சினைகள் உருவெடுக்கக் கூடிய சூழலே காணப்படுகிறது.

இதற்கொரு சிறிய எடுத்துக் காட்டு, பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டிருப்பவர், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகும். ஆனால், பொது வேட்பாளருக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே தமிழரசுக் கட்சி உள்ளது. வேட்பாளராகப் போட்டியிடும் அரியநேத்திரனிடம் அது விளக்கம் கோரியிருப்பதுடன், போட்டியிலிருந்து விலகுமாறும் அது பணித்துள்ளது.

ஆக பொதுவேட்பாளரை நிராகரிக்கின்ற கட்சியிலிருந்து கொண்டே, அதனுடைய மத்திய குழு உறுப்பினராக இருந்து கொண்டே, கட்சியின் நிலைப்பாட்டுக்கும் விதிமுறைகளுக்கும் மாறான முறையில் வேட்பாளராகக் களமிறங்கியிருக்கிறார் அரியநேத்திரன் என்றால், அவருடைய கண்ணி

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



யம், ஒழுங்கு, மதிப்புப் பற்றியெல்லாம் என்னவென்று சொல்வது? குறைந்த பட்சம் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அவர் விலகிக் கொண்டு தமிழ்ப்பொது வேட்பாளராக நின்றிருக்க வேண்டும். அல்லது இப்பொழுது விலக வேண்டும்.

மட்டுமல்ல, மட்டக்களப்பு ரகசியங்கள் என்ற அநாமதேய முகப்புத்தகத்தை இயக்கியோரில் ஒருவராகவும் அரியநேத்திரன் இருந்துள்ளார். அதற்குள்ளிருந்து கொண்டே தமக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர்களை அந்த அநாமதேய முகப்புத்தகத்தில் அவர் வசைகளைப் பாடிப் பழி தீர்த்திருக்கிறார்.

பொதுவேட்பாளராக அரியநேத்திரன் களமிறங்கிய போது தான் இந்த விடயங்கள் எல்லாம் வெளியே தெரியவந்தன. பொதுவேட்பாளராக அரியநேத்திரன் களமிறங்கியதை விரும்பாத மட்டக்களப்பு ரகசியங்களின் ஏனைய பங்காளர்கள் இந்த உண்மையைப் போட்டுடைத்துள்ளனர்.

இதை மறுத்துரைக்க முடியாத நிலையில் உள்ளார் திரு. அரியநேத்திரன். அரியநேத்திரனின் வயது, தகுதி, பொறுப்பு என எதற்கும் தகுதியில்லாத வேலை அதுவாகும்.

அப்படியான ஒருவரை தமிழரசுக் கட்சி மத்திய குழுவில் வைத்திருந்ததற்காக வெட்கப்பட வேண்டும். அதையும் விட அவரைப் பொது வேட்பாளராகக் களமிறக்கிய பொதுக் கட்டமைப்பினரும் அதற்குள்ளிருக்கும் மூத்த கட்சிகளும் கூடத் தலை குனிய வேண்டும்.

மொத்தத்தில் சிறுபிள்ளை விளையாட்டாகத் தொடங்கிய தமிழ்ப்பொது வேட்பாளர், பெருந்தீமைகளை உருவாக்கப் போகிறது.

1980களில் விடுதலை இயக்கங்கள், மக்களுடைய நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் மாறாக பொறுப்பற்றதனமாகச் செயற்பட்டன. இதைக் குறித்து அப்போது எழுத்தாளர் செங்கை ஆழியான், இந்த நாடு உருப்படாது என்றொரு நாவலையும் சிறுபிள்ளை வேளாண்மை குளவிக் கூட்டைக் கலைக்காதீர்கள் என இரண்டு சிறுகதைகளையும் எழுதினார்.

அந்தக் கதைகள் மிகச்சரியான கணிப்பீட்டையும் மிகக் கூடிய உண்மையையும் எடுத்துரைத்திருந்தன. ஆனால் அதை அன்று பலரும் ஏற்கவில்லை. எள்ளி நகைத்தனர். இறுதியில் செங்கை ஆழியான் சொன்னதே நடந்தது.

அதையொத்த காட்சிகளே இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன. ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் வரலாறு நகரவில்லை. தேங்கிக் கிடக்கிறது.

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : 416-321-6104



## ANNUAL GENERAL MEETING / ELECTION 2024

**TO ALL ACTIVE MEMBERS OF SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO**

The 29th Annual General Meeting (AGM) of Sri Ayyappa Samajam of Ontario will be held on Saturday October 19, 2024 from 10:00am to 1:00pm.
The venue for the meeting will be
635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8.
Election for 3 (Three) new Board of Directors for 2024 will be held on Saturday, October 26, 2024, between 10 Am to 2 PM
at Canada Sri Ayyappan Temple, Hall 2.
Nomination kit can be collected from the office from October 1, 2024 and submit the completed kit latest by October 10, 2024 by 12.00 noon.

For further details, please contact the temple – 416-321-6104 / 416-321-7558 - *Board of Directors*

## வருடாந்த பொதுக்கூட்டம் / தேர்தல் 2024

அன்புடையீர்!

ஸ்ரீ ஐயப்ப சமாஜம் ஒப் ஒன்ராறியோவின் 29வது ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் 19-10-2024 சனிக்கிழமை காலை 10.00 முதல் பகல் 1:00 மணிவரை ஆலய கலாச்சார மண்டபத்தில் இடம்பெறும்.
2024ஆம் ஆண்டுக்கான மூன்று (3) நிர்வாக அங்கத்தவர்களுக்கான தெரிவு (தேர்தல்), 26-10-2024 சனிக்கிழமை காலை 10:00 மணி முதல், பகல் 2:00 மணிவரை ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபம் - 2 இல் இடம்பெறும்.
**முக்கிய குறிப்பு:** விண்ணப்ப பத்திரம் ஒக்டோபர் 1, 2024 முதல் ஆலய காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்,
முடிவு தேதி அக்டோபர் 10, 2024 நண்பகல் 12:00 மணி.

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும். *அறங்காவலர் சபையினர்* : 416.321.6104, 416.321.7558



# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).

CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

**Suren Sornalingam** BBA

Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation



**Over 20 Years Experience in the field of Insolvency**

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# தமிழ்ப் பொது வேட்பாளரும் அரசியல் தற்கொலையும்!



**கட்டுரையாளர்:**
**லண்டனில் இருந்து**
**- இராகவன் -**

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு அரசியல் மாற்றத்தை வேண்டி நிற்கும் ஜனாதிபதித் தேர்தலாக இத் தேர்தல் அமைந்திருக்கிறது. 2022 மக்கள் போராட்டத்தின் விளைவாக ராஜபக்ச அரசு துரத்தப்பட்டபின் மக்கள் அரசியல் மாற்றமொன்றை வேண்டி நின்றனர். இனவாத அரசியலும், ஊழல் நிறைந்த அரசியல் அதிகாரமும், ஏற்றத் தாழ்வை அதிகரிக்கும் அரசியல் பொருளாதார கொள்கைகளும் இந்த நாட்டின் சீரழிவுக்கான முக்கிய புள்ளிகள் என மக்கள் சார் சமூக அரசியல் அமைப்புகளும் புத்தி ஜீவிகளும் எடுத்துரைத்தனர்.

இவ்வகையில் இந்த தேர்தலின் முன்னணி வேட்பாளர்களில் குறிப்பிட்ட சிலர் மக்கள் போராட்டத்தில் முகிழ்த்த மக்களின் அபிலாசைகளை ஓரளவு பிரதி பலிக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் பரப்புரைகளையும் மேற்கொள்கின்றனர்.

அனுர தலைமை தாங்கும் தேசிய மக்கள் சக்தி சமூக நீதி அரசியலை முன்னெடுப்பது மட்டுமல்லாமல் இனவாத அரசியலை நிராகரிக்கிறது. சஜித்தின் கட்சியானது 13 ம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்தும் என சொல்கிறது. ரனிலும் 13 திருத்த சட்டத்தை முழுமையாக அமல் படுத்தத் தயார் என்கிறார். இவ்வகையில் இத்தேர்தலில் தமிழ் மக்களின் பங்களிப்பானது தமிழர்களின் அரசியல் வாழ்வையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் என்பதை தமிழ் மக்கள் உணர்வர்.. பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது அரசியல் தற்கொலை என்பதையும் மக்கள் அறிவர்.

ஆனால் தமிழர் தரப்பினரில் ஒரு பகுதியினர் தமிழ்தேசிய பொதுக் கட்டமைப்பென்ற அமைப்பை உருவாக்கி ஜனாதிபதி வேட்பாளராக அரியநேத்திரனை நிறுத்தியுள்ளனர். தமிழர்கள் பொதுவேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழர்கள் மேலான இன அழிப்பை சர்வதேச கவனத்துக்கு கொண்டு சென்று விசாரணை மேற்கொள்ள சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு அழுத்தம் கொடுத்தல். சர்வதேச விசாரணை கோரி சர்வதேசத்திற்கு அழைப்பு விடுத்தல். மற்றும் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க இந்தியா உட்பட சர்வதேசத்தை நோக்கி தமிழரது ஏகோபித்த குரலை வெளிப்படுத்தல் என்பவை இந்த முடிவின் அடிப்படையாக சொல்லப்படுகிறது.

ஐ நா மனித உரிமை ஆணைக்குழு இலங்கையில் இராணுவம் யுத்தக் குற்றம் புரிந்தது என ஏற்றுக் கொண்டது. சர்வதேச மனித உரிமைச்சங்கங்கள் தமிழ் மக்களுக்கு மேலான அடக்கு முறைகளை தொடர்ந்து பதிவு செய்து வருகின்றன.

அத்துடன் 2009 காலகட்டத்திலிருந்து தொடர்ந்தும் ஐ நா மனித உரிமைக் கூட்ட தொடர்களுக்கு விஜயம் செய்வது, தீர்மானங்கள் நிறைவேற்றுவது, கோரிக்கைகள் விடுவது, கடிதங்கள் அனுப்புவது, வெளி நாட்டு தூதுவர்களை சந்திப்பது, மனுக் கொடுப்பது என பல நடவடிக்கைகள் இந்த பொது வேட்பாளரை நிறுத்திய கட்சிகளும், தமிழரசுக்கட்சியும் தனி நபர்களும் மேற்கொண்டனர்.

விக்னேஸ்வரன் தலைமையிலான வட மாகாண சபை தமிழருக்கு நிகழ்ந்தது இனப்படுகொலை என தீர்மானம் நிறை வேற்றியது. இதற்கு மேலாக பொது வேட்பாளரை நிறுத்தி உலகுக்கு உணர்த்துவது என்ன என்பது சிதம்பர ரகசியம் போல் உள்ளது.

இவ்வகையில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி இன அழிப்பை உலகுக்கு அறிவிப்போம் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை முன்னெடுப்போம் என்பது வெறும் கேலிக் கூத்து மட்டுமல்ல, தமிழ் மக்களை ஏமாற்றும் நடவடிக்கையுமாகும்.

சரி தவறுகளுக்கப்பால் தமிழரசுக்கட்சி ஆரம்ப காலங்களிலிருந்து மக்களை திரட்டி அகிம்சைப் போராட்டங்களில் ஈடுபட்டது. அதன்பின் ஆயுத அமைப்புகளும் பல்வேறு தவறுகள் மத்தியிலும் ஒரு குறிக்கோளுடன் அரசியல் இராணுவ கட்டமைப்புகளை நிறுவினர். ஆனால் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கச் சொல்லும் கட்சிகளும் தலைவர்களும் வெறும் ஊடகப் பேச்சாளர்களாகவும் வெளி நாட்டு தூதர்களை சந்திப்பதில் மகிழ்பவர்களுமாக இருக்கின்றனர். அத்துடன் அதே கட்சிகள் அரசுடனும் எதிர்க்கட்சிகளுடனும் மறைமுக, நேரடி தொடர்புகளையும் பேணுகின்றனர். ஆனால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கான மக்கள் சார்ந்த அமைப்புகளை கட்டுவதற்கோ தொடர்ந்த அரசியல் போராட்ட முன்னெடுப்புகளை மேற் கொள்வதற்கோ இவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. தமிழ் தேசியத்தை வெற்றுக்கோசமாக முழங்கும் அரசியல் வேடதாரிகள் இவர்கள்.

தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பின் அங்கத்தவர்களான டெலோவில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் புளட்டில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் உள்ளனர். உண்மையில் இவர்கள், இலங்கை அரசுடன் பேசுவதில் பயனில்லை. சர்வதேச தலையீட்டால் தான் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு வரும் என உளப்பூர்வமாக நம்பினால், தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்து உலகுக்கு உணர்த்தலாம். தோற்றுப் போவார் எனத் தெரிந்தும் ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கி தோல்வியை உலகுக்கு காட்டுவதை விட வென்ற பதவிகளை தூக்கி எறிவதன் மூலம் தமிழர்களின் ஆதங்கத்தை உலகுக்கு உணர்த்துவதே சிறப்பு.. ஆனால் பாராளுமன்ற சொகுசுகளையும் அதனால் கிடைக்கும் பலன்களையும் விட்டுக்கொடுக்க இவர்கள் தயாரில்லை. மாறாக மக்களை ஏமாற்றி மண் குதிரையில் ஆற்றைக் கடக்க சொல்கின்றனர். இதே போல் தமது இருப்பை மேற்குலகில் திடமாக்கி தமது பிள்ளைகளை மேல் நிலைக்கு கொண்டு சென்று விட்டு பொழுது போக்கு அரசியல் பேசும் வெளி நாட்டு தமிழர்களில் ஒரு பிரிவினர் பொது வேட்பாளரை கொண்டாடுகின்றனர். அதற்கான நிதியையும் நல்குகின்றனர். இவர்கள் தமது குடும்பம், உறவினர் அனைவரையும் வெளிநாடு அழைத்து நல் வாழ்க்கை வாழ்பவர்கள். விடுமுறைக்கு இலங்கை வந்து செல்பவர்கள். இவர்களுக்கு இலங்கையில் வாழும் தமிழர்களின் அரசியல் எதிர் காலம் பற்றி அக்கறை இல்லை. ஏனெனில் அவர்கள் இலங்கையின் அன்றாட வாழ்க்கை சிக்கல்களாலோ, இன ரீதியான அடக்குமுறைகளாலோ நேரடியாக பாதிக்கப்படுபவர்கள் அல்ல. இலங்கையில் வந்து இருக்கப் போவதும் இல்லை. தேசியம், சுயநிர்ணயம், தாயகம் என அர்த்தம் தெரியாமல் மந்திரம் உச்சரிப்பவர்கள். அதற்காக எல்லா வெளிநாடு வாழ் தமிழர்களையும் குற்றம் சாட்ட முடியாது. இலங்கையின் எதிர்காலம் பற்றிய அக்கறை கொண்ட பலரும் இருக்கின்றனர்.

இந்த ஊடக பேச்சு அரசியல் பிரமுகர்கள் புலம்பெயர் தமிழரில் ஒரு பகுதியுடன் சேர்ந்து ஆடும் அரசியல் நாடகமே பொது வேட்பாளர் தேர்வு.

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது மிக ஆபத்தான அரசியல் மட்டுமல்ல தமிழ் மக்களைஓரம் கட்டும் அரசியல். 2022 ஏப்பிரலில் எழுந்த மக்கள் போராட்டத்தின் பின் இனவாதத்தை முன்வைத்து வாக்கு கேட்கும் தெற்கு அரசியலில் ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

முதன்மை வேட்பாளர் எவரும் இனவாத அரசியலை முன்னெடுக்கவில்லை. ஏனெனில் மக்கள் போராட்டத்தில் ஒரு அம்சமாக இன ஐக்கியம் பேசப்பட்டது. முள்ளிவாய்க்கால் நினைவு அனுஸ்டிக்கப்பட்டது. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இவ்வாறான மக்கள் எழுச்சியை கண்டதில்லை, இவ்வாறான இன ஐக்கிய கோசங்களையும் கண்டதில்லை. இந்த மாற்றம் சிங்கள இனவாதிகளின் மத்தியில் விசனத்தையும் கவலையையும் ஏற்படுத்திவருகிறது. தமது அரசியல் இருப்புக்கு இந்த மாற்றம் ஆபத்தானது என அவர்கள் முனகுகின்றனர்.

இவ்வகையில் பொது வேட்பாளரின் தெரிவு சிங்கள இனவாதிகளுக்கு மகிழ்ச்சி தரும் விடயம். அவர்களுக்கு மெல்லுவதற்கு அவல் கிடைத்து விட்டது நாட்டை பிளவுபடுத்த சர்வதேச சதியுடன் பொது வேட்பாளர் இறங்கியுள்ளார் என பீதியை கிளப்ப இது வழி வகுத்துள்ளது. சர்வதேசம் ஒன்றும் செய்யாது என்பது சிங்கள இனவாதிகளுக்கும் தெரியும், பொது வேட்பாளரை நிறுத்திய கட்சிகளுக்கும் தெரியும். ஆனால் பிளவுவாத, இனவாத அரசியலை முன்னெடுக்க பொது வேட்பாளர் உதவுவார்.



அத்துடன் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து, அவர்களது தனித்துவமான பிரச்சனைகளை முன்வைத்து எந்தக்கட்சியும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லை. எனவே தமிழ் பொது வேட்பாளரை தமிழ் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கும் அடையாள வேட்பாளராக நிறுத்துகிறோம் என்று சொல்வதில் எந்த உண்மையும் கிடையாது.

ஐக்கிய சோசலிசக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பவர்.


அதேபோன்று மக்கள் போராட்ட முன்னணி தனது அரசியல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களை தேசிய இனமாக அங்கீகரித்து சுயாட்சி முறையை பரித்துரைத்தது. அவர்களின் ஜனாதிபதி வேட்பாளராக நுவன் போபகே களமிறங்கியுள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதாக கூச்சலிடும் தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பு இந்த இரு வேட்பாளர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து தமிழ் மக்களை அவர்களுக்கு வாக்களிக்க சொல்லியிருக்க முடியும். அவர்கள் வெல்வதற்கான சாத்தியம் இல்லை எனினும் தமிழ்மக்களுக்கு ஆதரவான குரல்கள் தெற்கிலும் எதிரொலித்திருக்கும்.


ஆனால் இவர்களது உள் நோக்கம் தமது அரசியல் இருப்புக்காக சிங்கள பெரும்பான்மை வாதத்திற்கு பதிலாக தமிழ் குறும் தேசியவாதத்தை வளர்ப்பதும் எந்தவித திட்டமுமின்றி மக்களை உணர்ச்சி அரசியலில் சிக்க வைப்பதுமாகும்.

எனவே தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களித்து இந்த நாட்டை சீரழித்த இனவாதத்தை மேலும் வளர்க்க ஒத்தாசையாக இருப்பது தமிழரின் அரசியல் இருப்புக்கு ஆபத்தானது. மக்கள் போராட்டத்தால் உருவான மாற்றத்தில் பங்குகொள்வது தமிழ் மக்களுக்கான அவசியத் தேவை. அத்துடன் இலங்கை வாழ் தமிழர்களின் அரசியல், பொருளாதார கலாசார வாழ்வு இலங்கையில் தான் தொடரப் போகிறது. (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடை நீங்கும். மனசோர்வு அகலும். மன அமைதி பாதிக்கும் படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர். அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் வீண் டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி செயல்படுவது நன்மை தரும்.





ரிஸபராசி அன்பர்களே! மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் பேசும் போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.





மிதுனராசி அன்பர்களே! முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். வெளியூர் பயணங்கள் உண்டாகும். அதனால் நன்மையும் ஏற்படும். வழக்குகளில் இருந்து வந்த சோதனைகள் மாறும். சொத்து சம்பந்தமான விஷயங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். நண்பர்கள் பல விதங்களிலும் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் குறையும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.





கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும்.தொழில் வியாபாரத்தில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவி பிரச்னைகளை நிதானமாக பேசுவது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காணப்படும்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். நிலுவையில் உள்ள தொகை வந்து சேரும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணதேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும். மேலிடத்திலிருந்து கனிவான உபசரிப்பு கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருப்பதன் மூலம் ஒற்றுமை இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். வாக்கு வன்மை அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.








தனுசுராசி அன்பர்களே! எந்த ஒரு காரியம் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பீர்கள். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில் தொடர்பான விவகாரங்களில் இருந்து வந்த வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வரும்.




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியம் கைகூடும். கடன் விவகாரங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வழக்குகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கலாம். மேலதிகாரிகளால் உத்யோகஸ்தர்களுக்கு நன்மை உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பாராத சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். கவலையை விட்டு விட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும் போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.




மீனராசி அன்பர்களே! வரவை போலவே செலவும் இருக்கும். பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழ் மக்கள் தங்களைத் திரட்டாமல்

(15ம் பக்கத் தொடர்ச்சி) அவர் உரையாற்றினார். அதுவும் பொது வேட்பாளர் தொடர்பில் சிறீதரன் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை என்பதனை வெளிப்படுத்தியது.

இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு இப்பொழுது ஓரளவுக்கு வெளிப்படையாகத் தெரியத் தொடங்கி விட்டது. இந்திய வெளியுறவு அமைச்சர், இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஆலோசகர் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர், யாழ்ப்பாணத்தில் உள்ள உப தூதுவர் போன்றவர்கள் தென்னிலங்கையில் உள்ள யாராவது ஒரு வேட்பாளரை ஆதரிக்குமாறு கூறி வரும் ஒரு பின்னணியில் பொது வேட்பாளர் இந்தியாவின் ப்ரொஜக்ட் என்று கூறுவது எந்த வகை அறிவியல்? அவ்வாறு சந்தேகிப்பவர்கள் மேலும் ஒரு தர்க்கத்தை முன் வைக்கின்றார்கள்.

பொது வேட்பாளர் சஜித்தின் வாக்குகளைக் கவர்ந்தால் ரணில் வெல்வார். எனவே ரணிலை வெல்லவைக்க வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பத்தை பொது வேட்பாளர் நிறைவேற்றுகிறார் என்று ஒரு வியாக்கியானம். முதலாவதாக ரணில் ஆட்சிக்கு வருவதை இந்தியா விரும்புகின்றது என்பது சரியா? ரணில் விக்கிரமசிங்க புத்தி சாலி தந்திரசாலி முதிர்ச்சியானவர். அவர் எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்துச் சமாளிக்கக் கூடியவர் என்பது ஒரு பொதுவான அவதானிப்பு ஆகும். அவ்வாறு எல்லா நாடுகளையும் சம தூரத்தில் வைத்துக் கையாளக் கூடிய ஒரு தலைவர் தெரிவு செய்யப்படுவதை இந்தியா விரும்பவில்லை என்பது ஏற்கனவே நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கான தேர்தல் நடந்த பொழுது தெரிய வந்தது. அதில் இந்தியா ரணிலுக்கு எதிராக நின்ற டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்குமாறு தமிழ் கட்சித் தலைவர்களை கேட்டிருந்தது.

கடந்த சில வார கால நகர்வுகளைத் தொகுத்துப் பார்த்தால் இந்தியா வெளிப்படையாகவே சஜித்தை ஆதரிக்குமாறு கேட்கிறது என்று தெரிகிறது. அப்படியென்றால் இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்று பொருள். இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்று தெரிந்த பின்னரும் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் அணியை இந்தியா இயக்குகிறது என்று கூறுவது எந்த வகை அறிவியல்?

ரணிலை வெல்ல வைப்பதற்கான இந்தியாவின் நிகழ்ச்சி நிரலைத்தான் பொது வேட்பாளர் முன்னெடுக்கிறார் என்ற சூழ்ச்சிக்கு கோட்பாடு சரியென்றால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தீவிரமான நிலைப்பாடுகள் தென்னிலங்கையில் யுத்த வெற்றி வாதத்தை தக்க வைக்க உதவும். அதன்படி மஹிந்த ராஜபக்சவை பலமாக வைத்திருப்பது தான் முன்னணியின் மறைமுக நிகழ்ச்சிநிரல் என்ற சூழ்ச்சிக் கோட்பாடும் சரியா? அல்லது பகிஷ்கரிப்பானது தென்னிலங்கை வேட்பாளர்கள் யாரோ ஒருவருக்கு சாதகமானது என்று வியாக்கியானப்படுத்தலாமா?

ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலில் விழும் மொத்த வாக்குகளில் ஐம்பது விகிதத்துக்கு மேல் எடுப்பவர் தான் ஜனாதிபதியாக வரலாம். ஆனால் தமிழ் மக்கள் வாக்களிக்கா விட்டால் விழும் வாக்குகளின் எண்ணிக்கை குறையும். அதனால் விழுந்த வாக்குகளில் 50 விகிதம் என்பது ஒப்பீட்டளவில் குறையும். அது தென்னிலங்கை வேட்பாளர்களுக்குச் சாதகமானது. எனவே பாகிஸ்கரிப்பானது தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு சாதகமானது என்று ஒரு வியாக்கியானத்தைச் செய்தால் அதற்கு என்ன பதில்?

அதைவிட மேலும் ஒரு ஆழமான கேள்வியை இங்கு கேட்கலாம். உலகில் உள்ள எந்த ஒரு பேரரசும் அயலில் உள்ள சிறிய இனத்தை அல்லது நாட்டை ஒற்றுமைப்படுத்த விரும்புமா? அல்லது டிவைட் அண்ட் ரூல் என்று ஆங்கிலத்தில் கூறப்படுவது போல பிரித்துக் கையாள முயற்சிக்குமா? இந்தப் பூமிப் பந்தில் சிதறிப் போய் இருக்கும் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தை ஒன்றாகத் திரட்ட வேண்டுமா இல்லையா? தமிழ் மக்கள் மத்தியில் கூட்டுணர்வை.தேசிய உணர்வை பலப்படுத்த வேண்டுமா இல்லையா? அவ்வாறு தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது தானே தேசிய வாத அரசியல்?

ஒரு மக்கள் கூட்டத்தை அவ்வாறு ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகளை ஒரு பக்கத்துப் பேரரசின் சதிவேலை என்று சந்தேகிக்கும் அறிவாளிகள் தங்களுடைய இனத்தை அவமதிக்கிறார்கள் தாங்கள் படித்த பல்கலைக்கழகங்களை அவமதிக்கிறார்கள். முற்கற்பிதங்களும் சந்தேகங்களும் ஊகங்களும் அவர்களுடைய அறிவை மழுங்கடித்து விட்டன. அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ தமது சொந்த மக்களைச் சிதறடிக்கும் சக்திகளுக்குச் சேவகஞ் செய்து கொண்டிருக்கிறார்கள்.

எல்லாத் தேசிய இனப்பிரச்சினைகளும் சாராம்சத்தில் அனைத்துலகப் பிரச்சினைகளே. எனவே அவற்றுக்கு உள்நாட்டுத் தீர்வு கிடையாது. அனைத்துலகத் தீர்வு தான் உண்டு. அப்படிப் பார்த்தால் அனைத்துலகத்தில் ஆதரவு அணியைத் திரட்டாமல் தீர்வு கிடைக்காது. அனைத்துலகத்தைத் திரட்டுவதென்றால் முதலில் ஈழத் தமிழர்கள் தங்களைத் தாங்களே திரட்டிக் கொள்ள வேண்டும். தமிழர்கள் தங்களைத் திரட்டாமல் அனைத்துலக சமூகத்தை எப்படித் திரட்டலாம் என்று யாராவது கூறுவீர்களா?

# தமிழ்ப் பொது வேட்பாளரும் அரசியல் தற்கொலையும்!

(21ம் பக்கத் தொடர்ச்சி) வேற்றுக்கிரகத்தில் இல்லை. எனவே தமிழர்களின் அரசியல் உரிமைகளும் ஐக்கிய இலங்கைக்குள் தான் பெற முடியும். சர்வதேசம் வந்து விடுதலை செய்யும் என்பது பகற்கனவு.

பாலஸ்தீன மக்கள் மேல் குண்டு மழை பொழியும் இஸ்ரேலை தமிழர் தரப்பு குறிப்பிடும் அமெரிக்கா, ஐரோப்பிய சர்வதேசம் பார்த்துக்கொண்டு அவர்களின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறது. இஸ்ரேலுக்கெதிரான ஐ நா பாதுகாப்பு சபை தீர்மானம், சர்வதேச குற்றவியல் நீதிமன்ற தீர்ப்பு, உலக நாடுகள் முழுவதும் பாலஸ்தீன மக்களுக்காதரவான மக்களின் பேரெழுச்சி இவை எதுவும் பாலஸ்தீனிய மக்கள் மேலான இனப்படுகொலையை நிறுத்தவில்லை.

அவ்வாறிருக்க தமிழர் பிரச்சனையை உலகுக்கு எடுத்து இயம்பவே பொது வேட்பாளர் நியமனம் என்பது வெற்று வேட்டு அரசியலும் மக்களை முட்டாளாக்கும் செயலுமாகும். அத்துடன் அரசியல் தற்கொலைக்கு மக்களை அழைக்கும் செயலுமாகும். மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல என்பதை இத்தேர்தலில் பொது வேட்பாளரை நிராகரிப்பதன் மூலம் மக்கள் உறுதி செய்வர்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதற்கு சமன் என்கிறார் கஜேந்திரகுமார்!

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதும், ஒற்றையாட்சியை வலியுறுத்தும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதும் ஒன்றுதான். தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும் பட்சத்தில், தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சகல சதித் திட்டங்களும் முன்னெடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

எனவே தமிழ்த் தேசியக் கொள்கைக்கு உண்மையாக இருப்பதற்கான வாய்ப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமாக மாத்திரமே சாத்தியமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினரால் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டிருக்கின்றார். இருப்பினும் தமிழர்களுக்கு சாபக்கேடாக இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தை ஆதரித்தவர்களும், ரணில் விக்கிரமசிங்கவே சிறந்த ஆட்சியாளர் எனக் கூறியவர்களுமே தற்போது அந்தப் பொதுக் கட்டமைப்பில் இருக்கின்றார்கள். எனவே அவர்கள் பொது வேட்பாளரைக் களமிறக்குவதன் ஊடாக தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு, ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தத்தை முன்னிலைப்படுத்தக்கூடிய சூழலை உருவாக்க முயற்சிக்கின்றார்கள். எனவே, தமிழ் மக்கள் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதும், ஒற்றையாட்சியை வலியுறுத்தும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதும் ஒன்றுதான். பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கும் பட்சத்தில், தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சகல சதித்திட்டங்களும் முன்னெடுக்கப்படும் என்பதை இப்போதே கூறிவைக்கின்றோம்.

அதேபோன்று இங்கு நாம் பூகோள அரசியல் சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டும். மேற்குலக நாடுகளும், இந்தியாவும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டுவதையே விரும்புகின்றன. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவைத் தமிழ் மக்களுக்கு சாதகமானவராகக் காண்பித்து வந்த நிலை மாறியிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், அவருக்குத் தமிழர்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதை இந்தியாவும், மேற்குலகமும் புரிந்து கொண்டிருக்கின்றது.

ஆகவே, ஏனைய வேட்பாளர்களுக்கு அளிக்கப்படக்கூடிய வாக்குகளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு அளிக்கச் செய்வதிலும் அல்லது ரணிலுக்குக் கிடைக்காத வாக்குகள் ஏனைய வேட்பாளர்களுக்கும் கிடைக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதையும் இலக்காகக்கொண்டு சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இதுவரையில் சமஷ்டி என்ற வார்த்தையை உச்சரிக்காமல் இருந்த தமிழரசுக் கட்சி, இம்முறை தேர்தலில் சமஷ்டியை வலியுறுத்தி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருக்கின்றது.

எனவே, இன்றளவிலே தமிழ்த் தேசியக் கொள்கைக்கு உண்மையாக இருப்பதற்கான வாய்ப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமாக மாத்திரமே சாத்தியமாகும்.

ஆகவே, இனி வருங் காலங்களில் தமிழர்களை எவ்வகையிலும் ஏமாற்ற முடியாது என்பதை இந்தத் தேர்தலில் காண்பிக்க வேண் டும் என்றார்.





- கி.துரைராசசிங்கம் -

# யார் இந்த பொது வேட்பாளர்? யார் இந்த சுமந்திரன்?

**மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளருமான கி.துரைராச சிங்கம் தமிழ் இளைஞர்களான தம்பியர்களுக்கு எழுதிய பகிரங்க மடல் இது.**

**அன்புள்ள தம்பி,**

உனது வயதைக் கடந்து வந்தவன் நான். உனது, உணர்ச்சியை மூன்றாம் தரப்பாக நின்று நான் பார்க்கவில்லை. நீயாக நின்றே, உன்னை நான் பார்க்கின்றேன். உனது குமுறல், கொந்தளிப்பு, உள்ளப் பதைப்பை எல்லாம் நான் அனுபவித்தவன் தான்.

ஆனால், நீ அனைத்தையும் உடைத்தெறியும், ஆக்ரோசத்தோடு பாயும் காட்டாறு. நான் அதிக தூரம் பாய்ந்து வந்து கரைக்கடங்கி ஓடி கழிமுகத்தை அண்மித்து விட்ட முதிர் ஆறு. நஞ்சைக்கும், புஞ்சைக்கும் நீர் வளர்க்க வேண்டிய என் கடமையையும் உணர்கின்றேன்.

என் வழிப்பயணத்தையும், உலக நடப்பியலையும் உனக்கு நான் சொல்லித்தான் ஆக வேண்டும். அவற்றை உரைத்திடும் போது என் மனம் உவப்படையாத சில விடங்களையும் நான் தவிர்க்க முடியாதுள்ளது. ஆனால், அவற்றை நான் ஆகக் குறைத்தே சொல்வேன்.

இலங்கை தற்போது ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிற்கிறது (2024). நாமும் இலங்கையர்கள்தானே. மாறி மாறி வந்த அரசுகள் எம்மை ஏறி ஏறி மிதித்தன. இதனால், இலங்கையன் என்று சொல்ல உனக்கு வெட்கமாய் இருக்கின்றதல்லவா? எனக்கும் தான் அப்படி இருந்தது. அதுவும் முள்ளிவாய்க்கால் கொடூரத்தின் பின்... சே... இது நாடா? கலிங்கம் வென்ற அசோகனே காலில் விழுந்து வழிபட்டு, பாவ விமோசனம் வேண்டிய... புத்தரைப் பூசிப்போர் அரியாசனத்தில் அமர்ந்துள்ள இந்த நாட்டை என் நாடு என்று சொல்ல நெஞ்சு இடம் தரவில்லையே என்பாய்.

உண்மை.. ஆனாலும், இந்த நாட்டில் உரிமை கேட்கும் நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டுமென்றால், நாம் இதன் குடிமக்கள் என்பதுதான் அதற்கான முதற் தகுதி. முதற் தகுதி குடிமகனாய் இருந்துகொண்டு தான் குறை கூற முடியும், அரசை. இதன் கட்டமைப்புக்குள் நின்று தான் நம்மைப் பிணித்துள்ள கட்டுக்களை உடைத்தெறிய முடியும்.

இவ்விடயம் பற்றித் திறனாய்வு செய்வதற்கு முன் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிற்கும் தமிழ்ப் பொதுவேட்பாளர் பற்றிய சில செய்திகளைப் பார்ப்போம், வா...

அண்மையில் இயற்கையெய்திய நமது பெருந்தலைவர் இரா.சம்பந்தன் ஐயா பொது வேட்பாளர் பற்றிக் கூறியதை நீ அறிவாய் தானே. “இது பைத்தியகாரத்தனமானதும், முட்டாள் தனமானதுமான காரியம்“ என்று அவர் சொன்னார். இது குறித்தும் நீ அவரை வசைபாடியதை நான் அறிவேன். ‘மூத்தோர் சொல்லும், முதிர் நெல்லிக் கனியும் முன்னால் கசக்கும், பின்னர் இனிக்கும்” என்பதை நீ அறியாயா... என்ன? ஐந்து, பத்து ஆண்டுகள் அல்ல, எழுபதுக்கும் மேற்பட்ட ஆண்டு கால முதிர்ச்சியின் வெளிப்பாடு அது. இயலாமையின் பிதற்றல் இது என்று நீ முணுமுணுப்பது எனக்குக் கேட்கிறது. அல்ல... அல்ல... இதைவிட அவர் மீது அபாண்டம் சொரிந்த அரைகுறைகளின் வார்த்தைகள் உன்னைக் கடுப்பேற்றி விட்டன தானே, பொறு... இது பற்றியும் பின்னர் பேசுவோம்.

இப்போது கவனி ! யார் இந்தப் பொது வேட்பாளர். இரண்டாயிரமாம் ஆண்டுவரை இவர் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களிக்கவில்லை, அறிவாயா நீ! அறியமாட்டாய், 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் இருந்து அவர் தமிழ்த் தேசியப் பாதைக்குள் வந்துவிட்டதாய்க் கூறுகின்றார், நம்பிவிட்டாய் நீ.

1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலை தமிழ் ஈழம் அமைப்பதற்கான வாக்கெடுப்பாய்ப் பிரகடனப்படுத்தியது தமிழர் விடுதலைக் கூட்டணி. இதில்... பட்டிருப்புத் தொகுதியில் தனது மாமன் முறையான P.இரத்தினசிங்கம் அவர்களின் ஐக்கிய தேசியக் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்திற்கு வாக்களித்தவர் இவர். இதுமட்டுமல்ல, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராகச் செயற்பட்டமை தொடர்பில் இரண்டு குறிப்புகள் உண்டு. அவற்றை நான் இங்கு தரவில்லை. நீ என்னைத் தொடர்பு கொண்டு அறிக.

தொடர்ச்சி▼



# யார் இந்த பொது வேட்பாளர்? யார் இந்த சுமந்திரன்?

தொடர்ச்சி▲

1989 பொதுத் தேர்தலில் ஈரோஸ்க்கு ஆதரவாகச் செயற்பட்டவர். இது செய்தி அல்ல, "வடக்கைச் சேர்ந்த அமிர்தலிங்கம் மட்டக்களப்பில் வெல்வதா?" என்று, பிரதேச வாதம் பேசி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கூட்டுக்கு எதிராக வேலை செய்தவர்களில் இவரும் ஒருவர்.1994, 2000 மற்றும் 2001ஆம் ஆண்டுகளிலும் ஐக்கிய தேசியக் கட்சிக் காகவே உழைத்தவர்.

2001ன் பின் தமிழ்த் தேசியத் தடத்தினுள் வந்தார். 2004 தேர்தலின் போது கருணா குழுவின் வழிப்படுத்த லிலேயே மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி வேட்பா ளர்கள் செயற்பட்டனர். பொது வேட்பாளரும் இவ்விதமே செயற்பட்டார். கருணாவின் பிரிவிற்குக் காரணமாயிருந்தவர் என்ற குற்றச்சாட்டில் இராஜன் சத்தியமூர்த்தி சுடப்பட்டார். இவரது மரணச்சடங்கில் பொது வேட்பாளர் கட்டுமட்டாய்க் கலந்துகொண்டார்.

மேற்குறித்த தேர்தலில் கருணா குழுவின் கட்டளைக்கு முரண்பட்ட மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் தோல்வியடைந்த தையும், கருணா குழு அரசோடு சேர்ந்ததன் பின் தெரிவு செய்யப்பட்ட கிங்ஸ்லி இராசநாயகம் அச்சுறுத்தலால் பதவி துறந்ததையும் பின் பொது வேட்பாளர் நாடாளுமன்ற உறுப் பினர் ஆனதையும் நீ அறிந்துகொள்.

இத்தரவுகள் பொது வேட்பாளர் மீது குறைகாண்பதற்கா கத் தரப்பட்டவை அல்ல. மாறாக 1976ல் இருந்து அவர் தமிழ்த் தேசியத் தடத்தில் நடக்கின்றார் என்ற அவரது கூற்று தொடர்பில் நீ தெளிவடைவதற்காகவே தரப்பட்டவை.

தம்பி, தமிழ்த் தேசியக் கட்டமைப்பின் தேர்தல் அறிக்கை என்ன சொல்கிறது எனத் தெரிந்து கொண்டாயா நீ? சமஷ்டி யையோ, தமிழீழத்தையோ அவர்கள் கோரவில்லை. மாறாகத் தமிழ்த் தேசமாய் ஒன்றுபடுவோம் என்று தமிழ் மக்களைக் கேட்கின்றார்கள். அவ்வளவுதான்.

தமிழீழமோ, சமஷ்டியோ ஓர் அரசியற் கட்டமைப்பு அல்லது நிறுவனம். ஆனால், தமிழ் மக்கள் தேசமாய் ஒன்றுபடுதல் ஒரு கட்டமைப்போ, நிறுவனமோ அல்ல. எதற்காக இது என்றால், சர்வசதேசத்தைக் கவர்ந்திட என்கிறார்கள். அந்தக் கவன ஈர்ப்பு எதனைச் சாதிக்கும்?

சர்வதேசம் என்பதைக் கருத்தோடு பார்த்தால், அது ஐக்கிய நாடுகள் சபையையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தையுமே குறிக்கின்றதென்பதை அறிவாய்... நீ. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் ஓர் அறிஞர் சபை, ஒவ்வொரு நாடு பற்றியும் ஆய்ந்து ஒவ்வோராண்டும் ஆய்வறிக்கை சமர்ப்பித்து, உலக அரசியலாளர்களைக் கொண்டு விவாதித்து... அவர்களை அறமுறை ஆட்சி செய்ய வழிப்படுத்துவோம் என்று முயல்கின்றது அது. ஆனால், அரசியலாளரோ தத்தம் அதிகாரங்களை நிலை நிறுத்தவே முயல்கின்றனரே தவிர அறிவழி செல்ல அல்ல.

உக்ரேன் – ரஷ்யா, இஸ்ரேல் – பலஸ்தீனம், ஆயுத ஆட்சி நடக்கும் ஆப்கானிஸ்தான்... எல்லாம் இதைத்தானே வெளிப்படுத்துகின்றன என்பதை அறிவாய் தானே... நீ.

நம் புலம்பெயர் உறவுகளின் வாக்குவங்கிகளைக் கொண்டுள்ள மேற்குலக நாடுகளில் அரசவைகளிலும், ஊராட்சி அவைகளிலும் நமக்கு இதமளிக்கும் குரல்கள் கேட்கின்றனவே என்பாய் நீ. உண்மை, அவை வேண்டும், அவை இலங்கை அரசுக்கு சிற்சிறு சங்கடங்களைத் தான் ஏற்படுத்தும். அதற்கு மேல் போகாது என்பதையும் அறிய வேண்டும் நீ.

ஆக... "அழுதழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்" என்பதை நீ உணர வேண்டும். நம் நாட்டு அரசியலமைப் பில் நம் உரிமைகளைப் பொறிக்க நாம் தான் உழைக்க வேண்டும்.

ஒன்றை நீ... நன்கு உணர வேண்டும். நமது விடுதலை என்பது... நம் மீதான ஆதிக்க சக்தியை நாட்டை விட்டு அகற்றி விட்டு நாம் நம் இறைமை கொண்டு நம் அரசமைப்பை உருவாக்கி நம்மை நாமே ஆள்வதல்ல. மாறாக ஜனநாயக அடிப்படையிலே எண்ணிக்கைப் பெரும்பான்மையினரோடு இருந்து கொண்டு எமக்கான பாதுகாப்புக் கவசங்களை ஏற்படுத்திக் கொள்வதே... அது... நம் விடுதலை.

இது தொடர்பான சில முன்னுதாரணங்களை உன் முன் வைக்கின்றேன்... பரிசீலித்துப் பார்.

தம்பி... இலங்கை சுதந்திரமடைந்த கையோடு மலையக மக்கள் ஏழு இலட்சம் பேரின் குடியுரிமை பறிக்கப்பட்டது.. அவர்களின் எட்டு பிரதிநிதிகளின் பலத்தைப் நாடாளுமன் றத்தில் இழந்தார்கள். இதை ஒட்டித் தான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தோற்றம் பெற்றதென்பதால் இதை நீ நன்கு அறிவாய்.

இவற்றுக்குச் சொல்லப்பட்ட காரணங்கள் எது எனத் தெரியுமா... உனக்கு? கவனி... அவர்களைப் பிரதிநிதித்து வப்படுத்திய கட்சி இலங்கை இந்திய காங்கிரஸ். எனவே, இவர்கள் இவர்கள் இந்தியாவின் விசுவாசிகளே, இவர்களுக்கு

தொடர்ச்சி▼



# யார் இந்த பொது வேட்பாளர்? யார் இந்த சுமந்திரன்?

தொடர்ச்சி▲

இங்கேன் குடியுரிமை என்றார்கள்... ஆட்சியார்கள்!

மலையகத் தலைவர்கள் சேர்ந்தார்கள்... ஆய்ந்தார்கள்... இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றம் செய்தார்கள். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அறுபதுகளில் செலுத்திய செல்வாக்கின் காரணமாக தொண்டமான் அவர்களுக்குப் நாடாளுமன்றத்தில் நியமன உறுப்பினர் என்ற தகுதியைப் பெற்றுக் கொடுத்தது. அரசின் ஆக்ரோசம் தணிந்தது.

இந்திய பாக்கிஸ்தானிய (வதிவோர்) குடியுரிமைச்சட்டம் கொடுத்த இடைவெளியைப் பயன்படுத்தி இழந்த குடியுரிமையை மெது மெதுவாகப் பெற்றார்கள். பின் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆனார்கள். அரசுக்கு ஆதரவு வழங்கினார்கள். 2008 வரை குடியுரிமை தொடர்பாக பல்வேறு சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேறின. இழந்த குடியுரிமையையும், நாடாளுமன்ற உறுப்புரிமையையும் பெற்றுக் கொண்டார்கள். தற்போது அடுத்த பரிமாணத்துக்குள், விரிவாக்கத்திற்குள் நகர்கின்றார்கள். நாடற்றோர்.. குடியுரிமை இழந்தோர்... என்பன எல்லாம் இன்று இல்லை அல்லவா?

அரசுக்கு ஆதரவு அளித்தல் என்றதும், நீ அதிர்ச்சி அடைகின்றாய். ஆம் தம்பி, ஈழத் தமிழர்களான நாம் இணக்க அடிப்படையிலே எம உரிமைகளை வெல்லுதல் என்ற அடித்தளத்திலே நின்று கொண்டுதான் ஆட்சிக்கு ஆதரவளிக்க வேண்டுமே தவிர, தற்போது ஆதரவளிக்கும் தமிழர்கள் போல் உதிரிகளாகச் சென்று அரசோடு கலந்து அல்ல. நாம் ஒரு கூட்டாக, ஓர் அணியாக எமது தனித்துவத்தை வெளிப்படுத்திக் கொண்டே இணக்க அரசியல் செய்வோம். எவ்விதத்திலும் கலந்தோ, கரைந்தோ விடமாட்டோம்.

சரி. இனி இந்தியாவுக்குச் செல்வோம்... வா. 1917க்கு முன்பே நீதிக்கட்சி செயற்படத் தொடங்கி விட்டது. ஆரிய எதிர்ப்பின் அடிப்படையில் திராவிட நாடு கோரியது அக்கட்சி. பின் பெரியாரின் திராவிடர் கழகம் அதை முன்நகர்த்திச் சென்றது. திராவிட முன்னேற்றக் கழகமும் அதையே பேசியது. 1962ல் இந்திய – சீனப் போர் மூண்டதைத் தொடர்ந்து அண்ணா திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டார். இந்தியாவுக்குள்ளேயே மாநில சுயாட்சி என்றார். 1967 இல் மதராஸ் மாநில ஆட்சியைக் கைப்பற்றினார்கள். 1969ல் அதை (மதராஸை)... தமிழ்நாடு எனப் பெயர் மாற்றினார். திராவிடர் கழகத்தில் இருந்த போது கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டிருந்தவர்... திராவிடர் முன்னேற்றக் கழகமானதும் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்றார். இன்று தி.மு.க பழனியில் முத்தமிழ் முருகனுக்கு விழா எடுக்கின்றது. மாநில சுயாட்சியின் முன்னேற்ற விரிவாக்கங்களில் ஒன்றாக... சுதந்திர தினத்தில் மாநிலங்களில் ஆளுநரே இந்தியக் கொடியை ஏற்றும் நிலைமை மாற்றி மாநில முதல்வர்களே கொடியை ஏற்றும் உரிமையை வென்றெடுத்தது தி.மு.க.

அப்படியே... வட அயர்லாந்துக்குச் செல்வோம்... வா. ஐ.ஆர்.ஏ. இயக்கம் தனிநாட்டுக்காக சுதந்திர வட அயர்லாந்துக்காகப் போராடியது. பிரித்தானிய இராச்சியத்தில் இருந்து பிரிய இரத்தம் சிந்தி உழைத்தது. இப்போது பிரித்தானிய இராச்சியத்துக்குள்ளேயே அதி உச்ச அதிகாரம் பெற்று தனக்கென நாடாளுமன்ற அதிகாரங்களைப் பெற்று பிரித்தானிய மாநில அரசொன்றாக ஒளிர்கின்றது.

ஆக... உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத நாட்டினுள்ளே அதி உச்ச அதிகாரம் பெறுவதே நம்போல் உள்ள மக்களின் விடுதலை என்பதை உன் உள்ளுணர்வு ஏற்கிறதா...? இல்லையா...?

இருப்பினும்... மாவீரர்களை, தேசியத் தலைவரை... சிங்கள அரசு செய்த இனஅழிப்பை... மறப்பதா...? மன்னிப்பதா...? மானம் கெட்டு வாழ்வதா...? என்றல்லவா உன் இரத்தம் சூடாகின்றது. "பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால்... சங்காரம் நிசமென்று... சங்கே முழங்கு" என்ற வரிகள் உன்னைப் புல்லரிக்கச் செய்கின்றதல்லவா?

தம்பி... இந்தக் கவிதையால் புல்லரித்து நின்றவன் தான் நானும். அந்தப் புல்லரிப்புத் தேவைதான். அதனைக் காலச் சூழலுக்கேற்ப மாற்றுவதுதானே வளர்ச்சி. நமது வீரர்களை, தலைவரை இன்னும் சுதந்திரமாக உச்சரிக்கவும், கொண்டாடவுமான சூழலை அமைப்பதுதான் நன்றி உணர்ச்சி... காலத்

தேவை. அதைச் செய்ய மேலுள்ள உதாரணங்களை நம் வழிகாட்டு விவரங்களாக ஏன் கொள்ளக் கூடாது?

தொடர்ச்சி▼

# யார் இந்த பொது வேட்பாளர்? யார் இந்த சுமந்திரன்?



தொடர்ச்சி▲

நீ சுமந்திரன் மீதும், சாணக்கியன் மீதும் கோபம் கொண்டுள்ளாய் என்பது எனக்குத் தெரியும். இது உனக்கு ஊட்டப்பட்ட உணர்வுதான் என்பதை நான் அறிவேன். நீ... ஆழமாகச் சிந்தித்தால் இதனை... அந்தக் கோபத்தை... ஊட்டியவர்களின் உண்மை உருவைக் கண்டால் நிச்சயம் சுயத்துக்கு வருவாய். முதலில் பின்வருபவற்றுக்கு உன் விடைகள் எவை எனச் சொல்...

2009ல் போர் மௌனித்த கையோடு கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் இரவோடு இரவாக பேருந்துகளில் ஏற்றப்பட்டு வன்னிக் காடுகளில் இறக்கப்பட்டார்கள், கதியற்ற இவர்களுக்காக இலங்கை உயர் நீதிமன்று கட்டளை பிறப்பித்தது. அவர்களைப் பத்திரமாகப்... பாதுகாப்பாக.. இருந்த இடத்திலேயே... திரும்பவும் விடுக என்றது. இக்கட்டளையின் காரணகர்த்தா நீ வெறுத்திடும் அந்த சுமந்திரன் தான் என்பதை ஏன் மறந்தாய்?

2010ல் பயங்கரவாதத்தைத் தோற்கடித்த அரசு என்றும், 2011 இல் அதே மாதிரியேயும் இலங்கைக்கு மகுடம் தரித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் 2012 தொடக்கம் இன்றுவரை போர்க்குற்றம் புரிந்த நாடாகக் கண்காணித்து வருகின்றதே... இலங்கையை. இதன் காரணகர்த்தாக்கள் சம்மந்தன் ஐயாவும், சுமந்திரனும் தான் என்பதை மறந்துவிட்டாயா?

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை காணொலிகளின் தொடக்கத்தைப் பார். நல்ல மழை... சாணக்கியனும், எண்ணக்கூடிய சிலரும் நனைந்தபடியே நடைபவனி தொடங்குகின்றார்கள். மறுநொடியே சுமந்திரன் சிற்றுந்தொன்றில் வந்திறங்குகின்றார். பவனி வேகம் கொள்கின்றது. முஸ்லிம் பிரமுகர்களும் கலக்கின்றார்கள். காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, கிண்ணியா போன்ற முஸ்லிம் பிரதேசங்களும் பிரவாகத்தில் கலக்கின்றன. கோத்தாவையே மூக்கில் விரல் வைக்கச் செய்த இக் கைங்கரியத்தின் காரணகர்த்தாக்களான சுமந்திரன் மற்றும் சாணக்கியன் மேல் உனக்கேன் கோபம் வருகின்றது?

நமது பிரச்சனையை “அரகலய” வுக்கும், வல்வெட்டித் துறையில் இருந்து காலி வரைக்கும் காவிச் சென்றவர்களை ஏன் புறந்தள்ள நினைக்கின்றாய்?

தம்பி... நல்லாட்சிக் கால நிகழ்வுகளை உன்னுள் முன் நிறுத்து. இவற்றின் காரணகர்த்தாக்களை நிறுத்துப் பார்... கையிலே நெய் இருக்க வெண்ணெய் தேடலாமா?

இவர்களைத் தலையிலே வைத்துக் கொண்டாடச் சொல்லவில்லை நான். மாறாகக் கேள்விகளைக் கேள்... விளக்கம் பெறு... விடை காண். நமது பிரச்சுனையை நமக்குச் சொல்ல... புலம்பெயர் நம் உறவுகளுக்குச் சொல்ல ஆள்கள் தேவையில்லை. அது நம் எல்லோருக்கும் தெரியும். சிங்களத் தலைவர்களுக்கு... சிங்கள மக்களுக்கு... இராஜ தந்திரிகளுக்கு எடுத்துரைக்கும் ஆற்றல்... எப்படி எடுத்துரைப்பதென்ற நுட்பம் யார் யாரிடமெல்லாம் உண்டென ஆராய்ந்து பார்.

கட்சி என்ன முடிவெடுத்தது என்பதைக் கவனத்திற் கொள். கட்சியினராய் இருந்த போதும் கட்சிக்குள்ளே கருத்தாடல் செய்யாது வெளியே நின்று சொல்வதெல்லாம் வெற்றுரை என்று தெளிவு பெறு.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல்களின் வரலாற்றில் நமது விடயங்களை நகர்த்தக்கூடிய ஒருவருக்கே... நாம்... தமிழ் பேசும் மக்கள் வாக்களித்தோம். இருவரை வெல்ல வைத்தோம். அன்றாடப் பிரச்சனைகள் பலவற்றைச் சாதித்தோம். அரசமைப்பைத் தொடவிருந்த தருணங்களில் அவை நழுவின. அவர் கூட.. தேசியத் தலைவர் கூட... தான் விரும்பியவர் வரக்கூடியதாக தமிழ் மக்களை வாக்களிக்கச் செய்தார். அதன்... ஜனாதிபதித் தேர்தலின் முக்கியத்துவத்தை அவர் அப்படித்தான் விளக்க முடியும் என்பதனைப் புரியாதவனல்லவே நீ.

இவற்றையெல்லாம் ஆய்ந்து... கலந்துரையாடி நமது தமிழரசு தீர்மானம் எடுத்துள்ளது. அபிப்பிராயப்படி இருபத்திரண்டுக்கு ஐந்து தான். ஆனால், கட்சியின் தீர்மானம் என்ற வகையில் அனைவரும் ஏற்றனர். பொறுப்புணர்வோடு மத்திய குழுவில் பங்குபற்றாத அன்பர்கள் தான் பொறுப்பற்றுப் பேசுகின்றார்கள். இதனால்தான் குழம்புகின்றாய் நீ.

கட்சி தீர்மானித்து..போர் முடிந்த கையோடு சிங்களத் தளபதிக்கே வாக்களித்தவர்கள் நாம். இதில் இருந்த இராஜதந்திரத்தை நாம் அறிவோம், உலகம் நன்கறியும். இப்போதும் ஆய்ந்தறிந்தே தீர்மானித்துள்ளது. கருத்து வேற்றுமை உண்டெனினும்..கட்சிக் கட்டுப்பாடல்லவா முக்கியம்?

கட்சிக் கூட்டத்துக்கு வராத கட்சித் தலைவரும் கூட, கூட்ட முடிவுக்குக் கட்டுப்படுவததான் முறை..சரி. ஜனநாயக நடைமுறை.

எனவே, தம்பி.. அறிவுடை நம்பி.. வரும் ஜனாதிபதித் தேர்தலில் தொலைபெசிக்கு வாக்களித்திடு.நம் பணியை அர்த்தமுள்ள அறிவுடமையோடு கூடிய தமிழ் உணர்வோடு தொடர்வோம்.

இப்படிக்கு,

**அண்ணாதாசன் கி.துரைராசசிங்கம்.**